


# மெல்லப் பறத்தல்

# மெல்லப்பறத்தல்

தொகுப்பு

**பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்**

வெளியீட்டு உதவி

உதவி.uthawi

www.uthawi.net

நூலின் பெயர்
**மெல்லப்பறத்தல்**
தொகுப்பு
**பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்**
முதல் பதிப்பு
**மார்கழி 2010**
வெளியீட்டு உதவி
**உதவி. நெற்**
கணனி வடிவமைப்பு :
**மல்ரி விஷன், அரசடி, மட்டக்களப்பு**
அச்சகம்:
**ஆர்.எஸ். வீ. கிராபிக்ஸ், கொழும்பு**
விலை
**175 ரூபா**

Title:
**Mellapparaththal**
First Edition:
**Dece 2010**
Edited By:
**Paddippalai Area Art Literature Social Development Organization.**
Size:
**Demy 1x8**
Pages:
**82**
Published By:
**uthawi net**
Book Design By:
**Multivision, Arasady, Batticaloa.**
Printed By:
**R.S.V. Graphic, Colombo.**
Price:
**175 Rupees**

நிம்மதி கலைத்த

நீண்டகால யுத்தத்தின் தீண்டலில்

தம்முயிர் துறந்த

எம் உறவுகளுக்காய் இந்நூல்

சமர்ப்பணம்

## முன்னுரை

தூய வளியும், இயற்கை வனப்பின் காட்சிகளும், பறவைகளின் இனிய ஒலியும் எவ்வாறு கிராமப்புற வாழ்வில் நுகரப்படுகின்றதோ அதே போன்று வஞ்சகமற்ற மனித மனங்களையும், அயலவர்களின் நல்வாழ்வுக்காகத் தம்மையே அர்ப்பணிக்கின்ற கள்ளங்கபடமற்ற உறவாடல்களையும் கிராமங்களில்தான் காணமுடியும்.

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறைகளும், உணவுப் பழக்க வழக்கங்களும், பண்பாட்டு விழுமியங்களும் மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு வந்த காரணத்தினாலேயே அத்தகைய உணர்ச்சி வெளிப்பாடுகளின் விளைவாக கலை இலக்கிய ஒன்றியத்தினரால் வார்க்கப்பட்டுள்ள, வடிக்கப்பட்டுள்ள கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் போன்ற இலக்கியங்கள் எம்மிடையே மேலோங்கி நிற்கின்றன.

அன்றைய அந்த அப்பழுக்கற்ற வாழ்க்கை முறையை இன்றைய இளந்தலைமுறை மறந்து விடக்கூடாது என்ற உணர்வுடன் கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. எமது கிராமிய வாழ்க்கை முறையை இன்றைய எமது தலைமுறை ஏன் மறந்து போனது?

இலத்திரனியல் சாதனங்களின் வருகையாலா? அல்லது இயந்திரமயமாக்கப்பட்ட வாழ்க்கை முறைகளினாலா? அல்லது எமது

கிராமியப் பண்பினைக் கடைப்பிடிப்பது கௌரவக்குறைவு என்று கருதியமையினாலா? எந்த உணர்வில் அந்த வாழ்க்கை முறைகளை மறந்து நவீனத்துவத்தில் எம்மைச் சிறைப்படுத்தி கொண்டோமோ அந்த வாழ்க்கையினூடாக நாம் பெற்றுக் கொண்டவை என்ன?

நீடித்த மாறாத நோய்கள்................!

தீராத வறுமையும் நிம்மதி இழந்த வாழ்க்கையும் தொலைக்கப்பட்ட உறவு முறைகளும்தான்....!

அந்த இயந்திரமயமாக்கப்பட்ட நெருக்கீடுகளிலிருந்து விடுபட மீண்டும் கிராமத்து வாழ்க்கையை அனுபவிக்க வாய்ப்பில்லையா என்று ஏங்குகின்ற எத்தனையோ மனிதர்களை நாம் நகர்ப்புறத்தில் இன்னும் சந்திக்கின்றோம்.

எமது கிராமப் புறத்து மக்களின் பேச்சு மொழிகளை கேட்கும் போது ஏற்படும் ஆனந்தமும் மன அமைதியும் தெய்வீக உணர்வும் வேறு எதிலும் ஏற்பட முடியாது.

“மனமாற்றம்” என்ற சிறுகதையில் தன் நீண்ட தோழியைக் கண்டு குதூகலமடைந்த வெள்ளையுள்ளம் படைத்த மாரிமுத்துவின் “அடியே மச்சாள் நாளைக்கு புள்ளைக்கு கலியாணண்டி...” என்ற பேச்சு வழக்குச் சொற்றொடர்கள் நேரிலேயே நின்று கதைப்பது போன்ற ஓர் உணர்வினை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான கிராமத்து பேச்சு வழக்குச் சொற்றொடர்களை நவீன இலத்திரனியல் கருவிகளில் ஒலிப்பதிவு செய்து மீண்டும் மீண்டும் கேட்பதில் உள்ள இன்ப உணர்வுகளை இன்றைய இளம் தலைமுறை யினருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆத்மார்த்த உணர்வுகளின் வெளிப்பாடே இந்நூலின் பிரதான அம்சமாகும்.

இளம் சந்ததியினர் இத்தகைய சிறுகதைகளையும், கவிதைகளையும் எழுதுவதும் அவற்றைப் படிப்பதும் கட்டாயமானதாகும். இளமைப் பருவம் மிக முக்கியமானது. அறிவை வளர்க்க வேண்டியவர்கள்

தொலைக்காட்சி, செல்போன், இன்ரநெற் போன்றவற்றின் பயன்பாட்டை உணராமல் அவற்றினால் சீர்கெட்டுப்போகின்றனர். இன்றைய சினிமாக்காட்சிகளும், நாடகங்களும், விளம்பரங்களும் இளைஞர்களைத் தம்பக்கம் இழுத்து அவலத்தைக் கொடுக்கின்றன.

இவர்களை சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய பொறுப்பு பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் இருந்த போதிலும் அவர்களை நல்லவற்றை படிக்கவும் சுயமாக சிந்திக்கவும் வழிப்படுத்த வேண்டியவர்களாய் கலை இலக்கிய ஒன்றியம் செயற்பட வேண்டும்.

எமது இளம் சந்ததியினா் எவ்வளவுக்கெவ்வளவு வாசிக்கின்றார் களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கின்றார்கள். அதே போல் எவ்வளவுக்கெவ்வளவு எழுத முனைகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கின்றார்கள். இதுதான் உண்மை. இதனால் இளம் சமுகத்தினரை வாசிக்கவும்,எழுதவும் தூண்ட வேண்டும்.

அந்த வகையில் எழுத்தாக்கத்தை தூண்டும் இத்தகைய வெளியீடுகள் போற்றத்தக்கவை. இன்று இளம் சமூகத்தினர் வாசிப்பதிலிருந்து விலகிக்கொள்கின்றார்கள். அதற்கான பல காரணங்களை சொல்லலாம். நூல் வெளியீடுகளை வாங்குவதை விட செல்போன்களை வாங்கிக் கொள்கிறார்கள். இதனை விட இளம் சந்ததியினா் தத்தம் வழியில் நடக்கத் தொடங்கி விட்டார்கள். இதனால் இவர்களின் நல்வாழ்க்கை புறந்தள்ளிப்போவதைக் காணலாம்.

இளம் சந்ததியினரை வாசிப்பில் ஈடுபடச் செய்ய வேண்டியது அவசியமாகையால் ஆக்கங்கள் வெளியிடப்பட வேண்டியது அவசியமானதாகும். பலதையும் வாசிப்பவர் பல விடயங்களையும் அறிந்து அவற்றை வேண்டிய இடத்தில் பயன்படுத்திக் கொள்வார். அதற்காகவே கதைகள், கவிதைகள் எழுதப்பட்டு அறிமுகம் செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும். இத்தகைய ஆக்கங்களை வாசிப்பதன் மூலம் எழுத வேண்டும் என்னும் ஆர்வம் தூண்டப்படும் அந்த வகையில் 'படுவான் மண்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கவிதையை நோக்குகையில்

படுவான் மண்ணின் பண்பாடு மிகவும் இனிமையாக வெளிப்படுவதைக் காணலாம்.

"சொந்த பந்தம் சேர்ந்து வந்தா
கறியும் சோறும் ஆக்கிப் போட்டு
காலோ அரையோ எடுத்த பிறகு
கதைச்சிப் பேசி சிரிக்கும்
பழக்கம் இதுதான் படுவான் மண்'

என்ற இவ்வடிகள் படுவான்மண்ணின் பண்பாட்டை, ஒற்றுமையை, இனிய வாழ்க்கையை அப்படியே அப்பட்டமாக எடுத்துக் காட்டுவதை நோக்குமிடத்து இவ் ஆக்கங்கள் பிரதேச வாசனையை வெளிப்படுத்தும் என்ற உண்மையை புலப்படுத்துகின்றன.

நீண்டகால யுத்த சூழலுக்குள் வாழ்ந்த இப்பிரதேச மக்களின் வாழ்வையும் அவர்கள் அடைந்த துன்பங்களையும் அத்துன்பங்கள் மீண்டும் வருமா? என்ற அச்ச உணர்வினையும்,ஆனந்த வாழ்வுக்கான முனைப்பினையும் இத்தொகுப்பில் காணலாம். ந.ஜனார்த்தினியின் "வசந்தத்தைத் தேடி......" என்னும் கவிதை இதற்குச்சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது.

"பூக்களும் புற்களும்
அகவும் அழகுமாய்
ஆனந்தமே ஆயுளாய்
சந்தித்திருந்த காலங்கள்
மீண்டும் எம் கரம்
எட்டுமா? தெரியவில்லை.
கொஞ்சம் சிரித்து
கொஞ்சம் மலர்ந்து

வாழ்வு செழித்து

வாஞ்சை நிறைவாகி

வாழ இனிமேல்

வழி பிறக்குமா?"

கல்வி என்னும் பெருங்கோயிலின் பொற்கலசமாகத் திகழ்வது உண்மையறிவு. அக்கோயில்கள் அழகார்ந்த விதானங்களாகவும் விமானங்களாகவும் மண்டபங்களாகவும் விளங்குவன பலவகை கலைகள் அவை அனைத்தையும் தாங்கிக் காத்து, அசைவின்றி நிற்கும் அடித் தளமாய் அமைவது மொழியறிவு. மொழியறிவின் துணைகொண்டே கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவ் வெளிப்பாட்டுக்கு வாயில்களாக அமைவன பல. அவற்றுள் கட்டுரை, கவிதை, சிறுகதை, நாவல்கள் என்பன குறிப்பிடத்தக்கன.

இந்த வகையில் மொழிவளத்தை மேம்படுத்த இந்நூலில் வெளியாகும் கவிதைகள், சிறுகதைகள், ஓசை, உலகியலை அதீத கற்பனையுடன் இணைக்கும் பாங்கு வேதனைகளையும் சாதனைகளையும் வடிக்கும் திறன் நிலவுலகில் கிட்டாததைக் கற்பனை உலகில் பெறுவதாகக் காட்டும் பூரிப்பு, வரலாற்றை வேதமாக்கும் மாண்பு, கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளத்தின் பிரதிபலிப்பு, உண்மை அன்பின் உயிர்த்துடிப்பு எனப் பல உணர்வுகளை நல்கி இதயத்தைக் கவர்வனவாக உள்ளன.

**திருமதி. இரஞ்சுதமலர் கருணாநிதி.**

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - தமிழ்,

பட்டிருப்புக் கோட்டம்.

## வாழ்த்துரை

பிரதேசத்தின் கலை இலக்கிய மரபுகள் புறந்தள்ளப்படும் இன்றைய கால கட்டத்தில் அவற்றின் தனித்துவத்தைப்பேணும்வகையில் பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியமானது **மெல்லப் பறத்தல்** என்னும் இலக்கியத் தொகுப்பினை வெளியிடுவதை யிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மரபுக்கும் கலைக்கும் இலக்கியத்துக்கும் இயல்பான பிறப்பிடமாக திகழ்வது பட்டிப்பளைப் பிரதேசமாகும். எமது பாரம்பரியங்களையும் முயற்சிகளையும் ஆவணப்படுத்துவதிலும் அவற்றை எதிர்கால சந்ததியின ருக்கு ஞாபகப்படுத்துவதிலும் மெல்லப்பறத்தலின் பணி அமைய வேண்டும்.

சமூகத்தின் இயல்பான உணர்வுகளாக வெளிவரும் இத்தகைய வெளியீடுகள் மகிழ்ச்சிகொடுக்கக் கூடியவையாகும். மெல்லப்பறத்தலுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

**திருமதி வாசுகி அருள்ராஜா,**
பிரதேச செயலாளர்,
மண்முனை தென் மேற்கு,
பட்டிப்பளை, மட்டக்களப்பு.

## தொகுப்புரை

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புக்குத் தெற்கே அமைந்துள்ள மண்முனை தென்மேற்குபட்டிப்பளைப் பிரதேசத்திலிருந்து அப்பிரதேசத்தின் பண்பாட்டுமரபுகள் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலித்து இந்நூல் வெளிவருகின்றது.

பச்சை பசேலென அழகொளி வீசும் வயல்வெளிகளும் சிற்சில இடங்களில் காடுகளும் மலைகளுமாய் அமையப்பெற்றது இப்பிரதேசம். வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய பிரதேச பிரிவுகளைப் படுவான்கரை என அழைப்பர். நகரத்தையும் இப்பிரதேசங்களையும் பிரிக்கும் வாவியை வைத்துக்கொண்டு நகரப்புறத்தை எழுவான்கரை என்றும் மேற்கூறிய பிரதேசங்களைப் படுவான்கரை என்றும் அழைக்கும் வழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகின்றது.2007 வரை நீண்ட காலமாக இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசமாகவும் இப் பிரதேசம் காணப்பட்டது.

பதினைந்து கிராமங்கள் சார்ந்து இருபத்து நான்கு கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட பட்டிப்பளை பிரதேசமானது பெரும்பாலும் விவசாயத் தொழிலை நம்பி சீவியம் நடத்துகின்ற மக்களை உள்ளடயக்கிய தாகும்.. இத்தொழிலுடன் மீன்பிடி, வியாபாரம், போன்றனவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கனவாக உள்ளன. மிகவும் குறைவான தொகையினரே அரசாங்கத் தொழில் புரிகின்றனர்.

நீண்ட காலமாக நிலவிய யுத்த இருள் கவிந்த வானமே ஒவ்வொரு வீட்டுக் கூரையிலும் தொங்கிக்கொண்டிருக்கிறது. இன்னும் வாழ்வில் முழுமையான ஒளியேற்றப்படவில்லை. மனித மனங்களில் பதிந்து போன மரணத்தின் திகில் முழுவதுமாய் கலையவில்லை. காலத்துக்குக் காலம் இங்குள்ள மக்கள் பல அனர்த்தங்களைச் சந்தித்திருந்தாலும் 2007 ஆம் ஆண்டு இடம் பெற்ற இடப்பெயர்வும் அதனால் நிகழ்ந்த அழிவுகளும் மோசமானவை. இந்த இழப்பிலிருந்து மக்கள் மீள்வதற்கு இன்னும் பல காலம் தேவையாக உள்ளது. நீண்டகாலமாக நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் பல பெண்கள் கணவனை இழந்தனர், ஏராளமானோர் கல்வியை இழந்தனர். தொழிலை இழந்தனர். நீடித்த வறுமைக்குள் தள்ளப்பட்டனர். அங்கவீனமாயினர். வாழ்விடத்தையும் பொருள் உற்பத்தி மூலத்தையும் இழந்தனர்.

இத்தகைய பின்புலத்தைக் கொண்ட இப்பிரதேசத்திலிருந்து உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடுகளாக - யதார்த்த பூர்வமாக பெரும்பாலும் இளம்படைப்பாளர்களின் எழுத்தாக்கங்களாக இந்நூல் வெளிவருகின்றது. யுத்த சூழல், அதனால் அடைந்த துயரங்கள் இத்தகைய நூல்கள் வருவதற்கு ஏற்றதாக அல்லது வாய்ப்பாக இருக்கவில்லை. பிரதேசத்தின் கலை, இலக்கிய பண்பாட்டு மரபுகளைப் பேணுகின்ற நோக்கம் கருதி உருவாக்கப்பட்ட "பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியமானது உதவி நண்பர்களின் உதவியுடன்" மேற்கொள்ளும் இப்பணியானது கவனிப்புக்குரியதாகும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

பலவேறு சந்தர்ப்பங்களில் பலவேறு சந்திப்புக்களின் போது கிடைக்கப் பெற்ற ஆக்கங்கள் இத்தொகுப்பினூடாக வெளியுலகத்திற்கு முன் பிரசன்னமாகி நிற்கின்றன. பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் நடாத்திய கவிதை - சிறுகதைப் போட்டிகளின் போதும் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தினரால் நடாத்தப்பட்ட கவிதைப் பயிற்சி வகுப்பின்போதும் இப்பிரதேச மாணவர்களிடமிருந்து பிரதேச மண்வாசனை, மக்களின் இன்னல்கள், யுத்தத்தின் தீண்டல்கள், நட்புக்கான ஏக்கங்கள், தேடல்கள் எனப் பல பொருள்களில் வெளிப்பட்ட ஆக்கங்கள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

பிரதேச சூழல், படைப்பாளர்களின் எழுத்தாளுமை, இப் படைப்புக்களினூடாக வெளிவரும் உணர்வுகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இத்தொகுப்புக்கு "மெல்லப் பறத்தல்" எனத் தலைப்பிடப் பட்டுள்ளது. இத்தொகுப்பில் இருபது கவிதைகளும் ஆறு சிறுகதைகளும் ஒரு நாடகமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பின்புலத்தைக் கொண்ட பிரதேசத்திலிருந்து இளம் படைப்பாளர்களின் ஆக்கங்களின் தொகுதியாய் அமையும் இத்தொகுப்பானது இளம்படைப்பாளர்களை மேலும் ஊக்குவித்து அவர்களை வளப்படுத்துவதோடு பலதொகுப்புக்கள் வெளிவருவதற்கும் காலாக அமையும் என எதிர்பார்க்கின்றோம். அத்துடன் இத்தொகுப்பினூடாக கிடைக்கும் நிதியினைப் பயன்படுத்தி பல படைப்பாளிகளின் ஆக்கங்களை வெளிக்கொணர முடியும் என்பதும் எமது நம்பிக்கை

உதவி இணையத்தின் வெளியீடாக இத்தொகுப்பு வெளிவரு வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். வியர்வை சிந்தி உழைத்த உழைப்பில் ஒரு பகுதியை சிறுதுள்ளி பெருவெள்ளமாக சேகரித்து ஈழத்து உறவுகளுக்கு உதவ வேண்டும் என்றும் வளரும் இளசுகளின் படைப்புக்களை வெளிக்கொணரவேண்டும் என்றும் நேசக்கரம் நீட்டிய உதவியின் பாச உறவுகளுக்கு உளம் உவக்கும் பலகோடி நன்றிகள்.

மேலும் இத்தொகுப்பு வெளிவருவதற்கு முன்னுரை வழங்கிய ஆசிரிய ஆலோசகர் திருமதி இரஞ்சுதமலர் கருணாநிதி அவர்கட்கும் ஆசியுரை வழங்கிய பிரதேச செயலாளர் திருமதி வாசுகி அருள்ராஜா அவர்கட்கும் இந்நூலினை கணணி வடிவமைப்புச் செய்த மட்டக்களப்பு, மல்ரி விஷன் நிலையத்தினருக்கும், சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய கொழும்பு ஆர்.எஸ்.வி கிராப்பிக்ஸ் அச்சகத்தாருக்கும் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**த.மேகராசா,**

தலைவர்,

பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய

சமூக அபிவிருத்தி ஒன்றியம்,

*03.09.2010.*

## மெல்லப்பறப்பவை


| கவிதைகள் | பக்கம் |
|---|---|
| 01. பருவான் மண் | 06 |
| 02. அந்தக் காலம் | 09 |
| 03. புதுப்பிக்கப்பட வேண்டும் | 11 |
| 04. எல்லாவற்றையும் இழந்தேன் | 16 |
| 05. காலைப் பொழுதில் கதவு திறந்தேன் | 18 |
| 06. பார் மனிதா பார் | 22 |
| 07. வசந்தத்தைத் தேடி... | 23 |
| 08. கலை மறுமலர்ச்சி | 25 |
| 09. பருவான்கரை | 32 |
| 10. மரணம் | 34 |
| 11. ஏழையின் மனச்சுமை. | 35 |
| 12. எம்பிரதேச மக்கள்... | 37 |
| 13. வறுமை | 42 |
| 14. உன் நினைவில் நான் | 44 |
| 15. உழவர் | 45 |
| 16. வாழ்வின் மகத்துவம்- | 50 |
| 17. என்னை விட்டுப் பிரிந்த உயிர் நண்பி | 52 |
| 18. சந்தி நாய் | 53 |
| 19. நட்பு | 59 |
| 20. என் தாயின் அவலம் என் வாழ்வுடன் | 60 |

**சிறுகதைகள்**

| | |
|---|---|
| 01. மனமாற்றம் | 01 |
| 02. வைகாசி சடங்கு | 19 |
| 03. உதிர்ந்த ரோஜா | 27 |
| 04. கிராமத்துப் பெண் | 38 |
| 05. கிராமத்துப் புழுதி மணல் | 46 |
| 06. வாழ்க்கை ஒரு நாடக மேடை | 55 |

**நாடகம்**

| | |
|---|---|
| 01. நட்பு | 63 |

## மனமாற்றம்

படகை நிறுத்தி விட்டு பக்கத்தில் இருக்கும் பற்றைக்குள் போன பாதையோட்டிகள் எப்போது வருவார்கள் என்று பார்த்துப் பார்த்தே பாதையில் நின்றவர்களின் கண்கள் அலுத்துவிட்டன. மண்முனை படகுப்பாதையில் ஏறிநின்ற மாரிமுத்துவின் மனசு முழுதும் சந்தோஷப்புயல். "அடியே மச்சாள் நாளைக்கு புள்ளைக்கு கல்யாணம்டி. காட்டு ஒன்டும் அடிக்கல்ல தெரிஞ்சாக்கள் கொஞ்சப்பேருக்கு வாயால சொல்றன். கட்டாயம் வந்திரனும்". என்றாள் பக்கத்தில் நின்ற வள்ளியிடம். இருவரும் நீண்ட காலத்து நண்பர்கள். மீன்பிடிக்க, கொள்ளியெடுக்க, உப்பட்டி கட்ட என்று எல்லா இடங்களுக்கும் இருவரும் செல்வதுண்டு. அந்த நெருக்கத்தில் பாதையில் நின்றவர்களையும் பாராமல் வள்ளியுடன் சத்தமாக கதைத்துக்கொண்டிருந்தாள்.

"யாரு மாப்பிளை" என்றாள் வள்ளி. "மாப்பிள தங்கமானவரு. பேரு வேலன். இங்கதான் பக்கத்தில பூஞ்சாமடுவில இருக்காரு. புள்ள வகுப்புக்கு போகக்குள்ள லவ் பண்ணித்து மனசப் பிரிக்க மனம் இல்ல. விட்டுத்தன். என்ன செய்ற எல்லாம் விதிப்படியே" மாரியின் பதில் தொடர்ந்தது. "ரெண்டெடத்த சாத்திரம் கேட்டாச்சு. யோடிப்பொருத்தம் பிரமாதமாம். இதவிட்டா முப்பத்தெட்டு வயதாகுமாம். நீயென்னடி செல்றா? "இந்தக் காலத்தில் நல்ல மாப்பிள எடுக்கிறதே கஸ்ரம். நீ கொடுத்து வைச்சவ. அது சரி சீதனம் கீதனம் ஒண்டும் மாப்பிள கேக்கல்லையா?" என்றாள் வள்ளி.

"அப்படி ஒண்டும் கேக்கல்ல நாங்களும் கதைக்கல்ல. அவசரமா காசு ஒரு லெட்சம் வேணும் பிறகு தாறன் எண்டு பிள்ளட்டகேக்க பிள்ளையும் வட்டிக்கு வாங்கி ஐம்பதாயிரம் கொடுத்தது. அவ்வளவுதான் கொடுக்கல் வாங்கல். வீட்டு நடப்பு

வந்து போற அவருக்குத் தெரியும் தானே ! சொல்லியா தெரியணும்!"

"பிடிச்ச பிடிய நல்லாத்தான் பிடிச்சிருக்கா எத்தன நாளுக்கு கஸ்ரப்படுற. கடவுளுக்கும் தெரியும் தானே மாரி" என்றாள் வள்ளி.

"பாத அடிக்கப் போகுது கவனமா பிடிச்சுக் கொள்ளுங்க" பாதையை ஓட்டுபவர் சொல்லி எஞ்சினை நிற்பாட்டினார். கதைத்துக்கொண்டு நின்றதில் இருவருக்கும் நேரம் போனதே தெரியவில்லை.

கையில் இருந்த இரண்டு கூடைகளையும் தூக்கிக்கொண்டு பாதையை விட்டு இறங்கினாள். தான் வைத்திருந்த கூடைகள் மிகவும் பாரமுடையவை. அதனால் அதனைத் தூக்கிக் கொண்டு நடந்து போக அவளாள் முடியவில்லை. குடும்ப வருமானத்தைப் பார்த்தால் ஓட்டோவில் போக முடியாது. ஆள் உதவி இல்லாத அவள் என்ன செய்ய முடியும். வள்ளியுடன் அவளும் போய் ஓட்டோவில் ஏறினாள். ஓட்டோ வீட்டடியில் நின்றது. "எவ்வளவு தம்பி?" "முப்பது ரூபாய்". ஓட்டோக்காரன் சென்று விட்டான். "கட்டாயம் வருவண்டி" வள்ளியும் சென்று விட்டாள்.

பொழுதும் கருகத் தொடங்கிவிட்டது. விடிந்தால் கலியாணம். தேடி எடுக்கவேண்டியவை வாங்க வேண்டியவை எல்லாம் வாங்கி முடிந்து விட்டது. கலியாணத்துக்கென்று கந்தப்போடியாரிடம் வட்டிக்கு வாங்கிய இருபத்தையாயிரம் ரூபாவும் கிட்டத்தட்ட முடியும் தறுவாய்க்கு வந்து விட்டது. வீட்டு மூலையில் வாங்கி கட்டித்தூக்கி வைத்திருந்த வாழைக்குலைகள் பழுத்து மணம் வீசிக் கொண்டிருந் தன. நாளை திருமண பந்தத்தில் இணைப்போகும் தனது மூத்தமகள் மாலாவை நினைத்தால் மாரிக்குப் பெருமை. இருபத்தெட்டு வயதாகும் மாலா நல்ல குணநலம் மிக்கவள். எந்தவிதமான கெட்ட நடத்தைகளும் இதுவரை அவளிடம் காணப்பட்டதில்லை. குடும்ப வாழ்வில் பின்பற்ற வேண்டிய பல புத்திமதிகளை பல நாட்களாக கூறியிருக்கிறாள். அப்போதும் தன் மூன்று பிள்ளைகளையும் கூப்பிட்ட மாரி "சொல்லவேண்டியாக்களுக்கு எல்லாம் சொல்லித்தன்.

நாளைக்கு ஏழு மணிக்கு கழுத்தில தாலி ஏறனும். மாப்பிளத்தத்திக்கு ஒரு கெழமைக்கு மொதல்ல சொல்லியாச்சி. அவயளுக்கு நடமொற தெரியும் தானே. நீங்க நாளைக்கு நாலுமணிக்கு எழும்பி நாளைய வேலையள சீக்கிரமாச் செய்யணும்.''

மணப்பந்தல் அலங்கரிக்கும் வேலை மும்முரமாக இடம் பெற்றுக்கொண்டிருந்தது.படலையை உயர்த்திக் கட்டி இரண்டு பக்கமும் சுந்தரன் தலைமையில் வாழைமரம் கட்டுப்பட்டுக் கொண்டிருக்கின்றது. “வாழ மீனுக்கும் வெலங்கு மீனுக்கும் கல்யாணம். அந்த ஐர மீனுக் குஞ்சிக்கெல்லாம் ஊர் கோலம் 00.......'' பாட்டைப்படித்தான் பாலன்: ஊரில் நடக்கும் எல்லாக் கலியாணத் திற்கும் அவன் போவான் : சிரிக்க வைக்க வேண்டுமென்றே ஏதாவது பாட்டைப் பாடுவான் அல்லது ஏதேனும் சொல்லுவான்.

“மாரியக்க வாங்கின கயிறு கிடக்கா'' வாழைமரம் கட்டிக்கொண்டிருந்த சுந்தரன் கேட்டான். “ஓ....! வாறன்''. மாரி ஒரு முடிச்சுக் கயிறோடு வெளியால் வந்தாள். எல்லா வேலையும் முடிந்து விட்டது. ஓறுத்துக் கிடந்த வானம் கருக்கொண்டு கிடந்தது போல அவளது வீடு வேட்கை பூர்த்துக் கிடந்தது.

‘மறந்து போய்த்தன் கந்தண்ண பாலுகொண்டு வந்தவரா? மாலா'' என்றாள் மாரி. “ஓம் அம்மா பத்துப் போத்தல் கூடக் கொண்டு வரச் சொன்னெண்டு முப்பது போத்தல் கொண்டு வந்தவரு''

நாளை நடக்கப் போகும் சந்தோசமான நிகழ்வை நினைத்துப் பார்த்த மாலாவின் உள்ளம் பூரிப்பால் விரிந்தது தனது அம்மாவுக்குச் சுமையாக இருந்த தனது திருமண விடயம் நிறைவேறுவதால் அம்மா இனி சந்தோசமாக , மனப்பாரம் குறைந்து வாழ முடியும் என்னும் நினைப்பு அவளுக்கு.

மாரியின் கணவன் அவளை விட்டு பிரிந்து போய் பதினாலு வருஷம். ஒரு கிழமையில் எப்படியும் ஒரு நாள் தப்பினால் இரண்டு நாள்தான் அவளது புருஷன் வீரன் வேலைக்கு போவான். உழைப்பது குடிக்கவும் போதாது. அப்படியிருந்தும் இன்னொரு

பெண்ணோடு தொடர்பு வைத்து கடைசியில் மூன்று பெண்பிள்ளை களையும் விட்டுப்போட்டு போன பொறுப்பற்றவன் அவன். எனினும் மாரி சோரவில்லை. குடும்பத்தலைவியாக மாரி, நெல்லுக்குத்தி அரிசி இடித்து விற்று தன் குடும்பத்தை இந்த நிலைவரக் கொண்டு வந்து விட்டாள். நாளை நடைபெறவிருக்கும் திருமண நாளுக்கு வாழ்த்துச் சொல்வது போல வானமும் சிறிது இருண்டு ஒரு பாட்டம் மழையும் பெய்து விட்டது.

இரவு எட்டு மணியாகிவிட்டது. வரவேண்டியவர்கள் வந்து முகத்தைக் காட்டிச் சென்று விட்டார்கள். இனி அவர்கள் நாளைக்குத் தான். மாலாவின் கையடக்கத் தொலைபேசி ஒலித்தது. போய்ப் பார்த்தாள். அவளது மாப்பிள்ளை. சந்தோஷசப்பூக்கள் உள்ளத்தில் மலர, 'கலோ' என்றாள். நாளைக்கு நான் கட்டாருக்கு போறன் வந்துதான் கல்யாணம்". போன் சத்தமற்று அமைதி கொண்டது. நெஞ்சில் இடிவிழுந்தது போல இருந்தது. கண்களில் பெருந் துளியாய் நீர் சுரக்க "அம்மா" என்று விழுந்து அழத்தொடங்கினாள். மாரி ஓடிவந்து "என்ன மகள் என்ன?" கத்திக் கொண்டு கேட்டாள். "அவரு நாளைக்கு கட்டாருக்கப் போகப் போறாராம்". எல்லோரும் சேர்ந்து அழுதனர். அவல ஓலம் போலவே ஊரெங்கும் ஒலித்தது. யாரோ இறந்து விட்டார்கள் என்று நினைத்து ஊரிலுள்ளோர் ஓடிவந்தனர். முற்றமெல்லாம் சனக் கூட்டம் நிரம்பி வழிந்தது.

வேலனின் சமீப காலச் செயற்பாடு, பொய்யாகிப்போன அவனது வார்த்தைகள் எல்லாம் அவன் இனி ஒரு போதும் தன்னை திருமணம் செய்யமாட்டான் என்பதனையே மாலாவுக்கு உணர்த்தின. ஏங்கி ஏங்கி அழுதாள். என்ன செய்வதென்று தெரியாமல் தினறினாள்.

பலரும் ஆறுதல் கூறிச் சென்றனர். "வேலனைச் சம்மதிக்க வைச்சி நாளைக்கு கலியாணத்த முடிச்சிரலாம்". ஊர் பெரியவரும் அப்படித்தான் கூறினார். மாரி பலதையும் யோசித்தாள். சந்தோஷக் களிப்போடு செய்த அத்தனை வேலைகளும் கவலைமேல் கவலை கொள்ளச் செய்தன அவளுக்கு. வேலன் கட்டாருக்கு போவது

உறுதியாக தெரிந்து விட்டது. நேரம் கடந்து கொண்டே இருந்தது. கலகலப்பு ஒய்ந்து விட்டது.

மாலாவின் போன் மீண்டும் ஒலித்தது. போனை கதைக்க மாலாவுக்கு பிடிப்புற்று இருந்தது. மாரி போனை எடுத்து "கலோ" என்றாள். "நான் சீலன் கதைக்கிறன்". "சொல்லுமகன்". "நடந்தது எல்லாத்தையும் அறிஞ்சன் மாமி. நீங்க எப்படியான நெலையில இருக்கிங்க எண்டும் எனக்குத் தெரியும். மாலாவை நான் கட்றன் எண்டு ஏற்கனவே சொன்னன். மாலா கேட்கல்ல மாமி. மானம் கெட்டவன் எண்டு என்ன நினைக்காதிங்கோ மாலாவோட நான் வச்ச காதல் இன்னும் குறையல்ல. மாலா செரியண்டா நான் நாளைக்கு கலியாணத்திற்கு செரி. கேட்டுத்து சொல்லுங்க". அவ்வளவுதான் சீலனின் தொடர்பு நிறுத்தப்பட்டுவிட்டது. மாரியின் மனசில் புதிய நம்பிக்கை ஒளி கொண்டது. சீலன் தன்னிடம் மாலாவைக் கல்யாணம் செய்து தரும்படி பலதடவை கேட்டதையும் அவனுக்காக மாலாவிடம் பல தடவை கதைத்ததையும் நினைத்துப் பார்த்தாள்.

நேராக மாலாவிடம் சென்றாள். சீலன் கூறியதைக் கூறினாள். இருவரும் கண்கள் நனைய கட்டிப்பிடித்து அழுதார்கள். சிறிது நேரம் மாலா மௌனமாக இருந்தாள்: மனதை மாற்றிக் கொண்டாள். வாழவென்றே துணிந்தாள். "சீலன்விருப்பம் கேட்டு கெஞ்சியும் ஒண்டும் சொல்லாத நான்தான் முட்டாள். அம்மா! நாளைக்கு கல்யாணத்திற்கு நான் சரி". குரல் கணக்க கூறினாள் மாலா. அரைத்தூக்கத்தில் கிடந்த இளைய மகள் எழுந்து "யாரம்மா மாப்பிள்ளை". நம்மட சீலன் அத்தான்தான்.........

● மாரிமகன்

## படுவான் மண்

வணக்கம் "வாங்க" என்று சொல்லும்
பழக்கம் இதுதான் படுவான் மண்
குடிக்க தண்ணி கொண்டு தந்து
எடுப்பம் "சோறு" என்று சொல்லும்
பழக்கம் இதுதான் படுவான் மண்.

புள்ள பொறந்தா கூடி வந்து
புது முகம் பார்க்கச் சேரும்
பழக்கம் இதுதான் படுவான் மண்.

பூத்து மலராய் குந்தும் போது
பூசும் மஞ்சள் கொண்டு வரும்
பழக்கம் இதுதான் படுவான் மண்.

செத்த வீட்ட சேந்து நிண்டு
மொத்தப் பேரும் கொண்டு சென்று
மத்தக் கதய பொறகு பேசும்
பழக்கம் இதுதான் படுவான் மண்.

நாட்டு நடப்ப நகைச்சி பேசி
அடுத்த வீட்ட உரசிப் பேசி
கூட்டம் குழம்பும் குமருப் பெண்கள்
பழக்கம் இதுதான் படுவான் மண்.

ஏரைத்தூக்கி எருதில் வச்சு
காலைத்தூக்கி சேற்றில் வச்சு
பாருக்கெல்லாம் சோறு வைக்கும்
பழக்கம் இதுதான் படுவான் மண்.

"அடிடா" "உதடா" சத்தம் கேட்டால்
அருகில் வந்து கூடி நிண்டு
"புடிடா" "புடிடா" எண்டு சொல்லும்
பழக்கம் இதுதான் படுவான் மண்.

அண்டா குண்டா அடகு வச்சு
அதில வாற காச வச்சி
இந்தா "புடிடா" புடிடா" என்று
சொல்லும் - பழக்கம் இதுதான் படுவான் மண்.

சொந்த பந்தம் சேந்து வந்தா
கறியும் சோறும் ஆக்கிப் போட்டு

"காலோ" "அரையோ" எடுத்த பிறகு
கதைச்சிப் பேசி சிரிக்கும்
பழக்கம் இதுதான் படுவான் மண்.

பழக்கத்தெல்லாம் சொல்லியாச்சி
இன்னும் இருக்கி கொஞ்சம் யோசி
எழுதி வச்சி நீயும் வாசி
"வணக்கம்" வாறம் படுவான் மண்.

● **சோலையூரான்**

# அந்தக் காலம்

வடகீழ் துருவங்கள்
வாய்பிழந்த அக்கினிக்குள்
தொடுவானம் எல்லாம்
துவைக்கின்ற இரத்தக் கறை.
ஷெல் வந்து இங்கு கிணறு தோண்டும்.
சீனா வெடி எல்லாம் "ச்சீ" என்று தோன்றும்.
கனவு கண்டு எழும் போது காலையிலே - பல
காளைகளைக் காணவில்லை சேதி வரும்.
சேலை கொண்டு சென்ற பெண்ணின்
சேலை வரும் பின் பேழை வரும்.
நாய் குரைக்கும் சத்தம் கேட்டால்
நடு இரவில் பயம் பிறக்கும்.

பாடசாலை கோயிலெல்லாம்
பாழ்வளவு ஆன காலம்
பகலெல்லாம் பாலை வனம்
இரவெல்லாம் மயானம்.
கீழ்த் திசையில் மீன்பாடும்
தேனாட்டில் திகில் நிறையும்.

படாத பாடெல்லாம்
பட்டதிந்த படுவானம்
படலைக்குள் புகுந்ததும்
பங்கருக்குள் பதுங்க வேண்டும் - எம்
இடம் விட்டு இடம் போய்
இருந்த காலம் எவ்வளவோ

மணப் பெண்ணின் கூறைச் சேலை
கூரைச் சேலை ஆன காலம்
குழந்தைகள் இளசெல்லாம்
குதூகலம் இழந்த காலம்
பரணிக்கு படியழந்த படுவான் மண்
பாவம் செய்த காலம்
இனியும் வருமோ! அந்தக் காலம்
இனி வேண்டாம் அந்தக் காலம்.

● **சோலையூரான்**

## புதுப்பிக்கப்பட வேண்டும்

மண்ணின் விசித்திரமாய்
மானத்தின் கோத்திரமாய்
கண்ணின் மணிகளாய்
காலத்தின் கதவுகளாய்
மலர்ந்து கொண்டே
மிளிரும் இம் மானுடம்
இன்னுமின்னும்
புதுப்பிக்கப்படாமலே இருக்கிறது.

நாகரீகப் புயலால்
நம் பிஞ்சுகள்
கனிவதற்குப் பதிலாய்
நானிலம் காப்பதை விட்டு
நாதியற்று வெம்பி விழுகிறது.

நீலக்கடலிடை நீலவானிலே
நீண்ட தூரம்
நீச்சல் அடிப்பதை விட்டு விட்டு
நீலப்படங்களுக்கு
நித்தம் நித்தம் நிற்கதியாகிறது.

அந்தோ!
இராமனுக்கு மட்டும்
பகிரப்பட்ட
சீதாவின் சேலை,
இப்போ!
அவன் தம்பியர்க்கும்
பங்கீடு செய்யும் பரவசம் ஆகிறது.

இப்போ!
பாரதியின்
பாஞ்சாலி சபதம்
பல்லாயிரம் வரிகள் கொள்கிறது

துரியோதனர்
சூதாட்டம் சூடுபிடிக்கின்றது.
செயற்கை சுவாசம் தரித்து
செம்மீனும் செல்லத் தொடங்குகின்றது.

இருப்பின் உருவை
உறுதிப்படுத்தும்
காலத்தின் கண்ணாடி
இலக்கியம் என்போம்
அவ் இலக்கியம்
எங்கே போனது?

பூமிப்பந்தின் கீழா?
இல்லை
பூலோகம் விட்டு
மேலோகத்திலா?
எங்கே சென்றது?

சென்ற இலக்கியம்
திரும்பி வரட்டும்
சோரும் மாந்தரின்
சோகம் தீர்க்கட்டும்
புதுப்பிக்கப்படட்டும்!

இராமரைக் கூறும்
இராமாயணம் போல்
கிருஷ்ணர் கூறும்
கீதை போல்
இனிதான ஓர்
இலக்கியம்
இயம்பிடச் செய்வோம்.

சுற்றும் காற்றில்
சுதந்திரம் வீசட்டும்
வெட்டுக் கிளியும்
வேங்கையென்றுணரட்டும்!

ஆட்சி தான்
அரசு எனும்
அகராதி உடைப்போம்
அது – எம்
பேச்சிலே இல்லையென்று
பெருமிதம் கொள்வோம்.
இங்கே
அரசியல் பதம்
அனாதையாகிறது
பாவம்
பதத்திற்கே இக்கதி என்றால்
கதாபாத்திரத்திற்கு எக்கதி?

செய்மதியில்
விரைந்து செல்லும்
விசித்திர உலகம்
உண்மையில்......
இன்னுமின்னும்
ஆமை மீதிலே பயணம் செல்கிறது
புதுப்பிக்கப்படட்டும்.
என் இனிய இளரத்தங்களே
புறப்படுங்கள்!
இனியாவது ஒரு விதி செய்வோம்
இல்லையாயின்

ஒரு கதை சொல்வோம்
"கதை" பின் விதியாகும்
அதுவே
சரித்திரம் காணும் சுதி ஆகும்.

● **அரசூர் பகீரதன்**

## எல்லாவற்றையும் இழந்தேன்

தடாகம் போல்
காட்சியளித்த
அரும் பெருங் காட்சியகம்.
ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்
சந்திரன் போன்ற
அன்னை மடி.....

அன்பையும் ஆதரவையும்
தேடி நிற்கும் இதமான
நண்பர்கள் கூட்டம்......

புன்னகையும்
களியாட்டமும்
நிறைந்த என் வாழ்வு....

அள்ளிச் சொரிகின்ற
உறவினரின்
கைக்கடங்காத
பாற்கடல் போன்ற
அன்பு நிறைந்த
இன் சொல்.....

மதி முகத்தில்
தவழுகின்ற
புன்னகையின்
வெளிச்சம்....

எண்ணிலடங்கா
ஆசான், பெரியோன்
அனைவரதும்
நல்லாசி
அத்தனையும் பஞ்சாய்ப் பறந்ததடி நெஞ்சே!

● சு.நளினி

## காலைப் பொழுதில் கதவு திறந்தேன்

காலைப்பொழுதில் கதவு திறந்தேன்
கதறும் குழந்தை சத்தம் கேட்டேன்.
கண்ணகி சிலையை வீதியில் பார்த்தேன்.
கருணை இல்லா கயவரைப் பார்த்தேன்.

நல்லது எதுவும் புலப்படவில்லை.
நாய்க்குணம் பிடித்த மனிதனைப் பார்த்தேன்.
நாளைய உலக நிலையை யோசித்தேன்.
நானே மெய்மறந்து நடுங்கி நின்றேன்.

பொய், சூது, பொறாமை கொள்கை எழுந்து நின்றது.
மனித வாழ்க்கையை அடக்கி சாக வைத்தது.
பார் இறைவா!
இவ் உலக நிலையை என்று
பைத்தியம் போல் கதறி நின்றேன்.

அன்றைய மனித வாழ்க்கையை காணவில்லை
நீதி எங்கும் தேடினேன்.
இது எப்போது கிடைக்கும் இறைவா என்று
கதவை அடைத்து உள்ளே சென்றேன்.

● சு.நளினி

## வைகாசி சடங்கு

கமலாவின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லாமல் மிகவும் குதூகலமாக தனது தோழிகளுடன் சுற்றித்திரிகின்றாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏன் ஏறக்குறைய நான்கு ஆண்டுகளுக்குப் பிறகுதான் கமலாவின் வண்ண வதனத்தில் இத்தனை மகிழ்ச்சி ஊசலாடுகின்றது. பல நாட்கள் கமலாவின் முகத்தில் மகிழ்ச்சிப் புன்னகையை காண்பதற்காக பலர் தவித்ததுண்டு. அந்த வகையில் கமலாவின் சந்தோஷத்தினைக் காண தவித்தவர்களில் அவர்களு டைய தந்தை சின்னையா முக்கியமானவர்.

இது ஒரு அழகிய கிராமம் பச்சை வயல்களும் பசுந்தாட் புல்வெளியும். சுற்றிவரச் சோலைகளும், சுகம் தரும் வாடைக் காற்றும் மனதிற்கு நிம்மதியளிக்கும் கிராமத்தான் சில்லிக் கொடியாறு. அந்தக் கிராமத்தில் வாழ்ந்த குடும்பங்களில் சின்னையாவினது குடும்பமும் ஒன்றாகும். சின்னையா ஓர் கண்ணியமான மனிதர். கடமை உணர்வு நிறைந்தவர். குடும்பத் தலைவனுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்தான் சின்னையா. தன்னுடைய மனைவி பார்வதி மீது மனம் நிறைந்த காதலும் மகள் கமலாவின் மீது நிறைந்த அன்பும் கொண்ட ஊர் வம்புகளுக்குப் போகாத ஓரே மனிதர் என்றால் அது சின்னையாவே தான்.

இவர்கள் இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் ஒரு நாள் “ஏன் புள்ள பார்வதி! என்னது படுவானுக்க மொழங்கிற மாதிரி சத்தம் கேட்குது” என்றார் சின்னையா. தானும் ஒரு தரம் நிதானமாக நின்று கேட்டு விட்டு “ஒண்டுமில்லீங்க. அது அங்கால பக்கத்துப் பிள்ளைகள் சீனா வெடில் சுடுதுகளாக்கும்” என்று பார்வதி கூறியதும்

அருகிலிருந்த கமலா "அப்பா எனக்கும் சீனா வெடில் வாங்கித் தாங்களன்" என்று கேட்டாள். அப்பொழுது கமலாவிற்கு வயது பன்னிரெண்டுதான். கமலா சீனா வெடில் வாங்கித் தாங்களன் என்ற மறுகணம் எங்கிருந்தோ பேரிரைச்சலுடன் வந்த செல் ஒன்று சின்னையாவின் வீட்டின் மீது விழுந்தது. சின்னையாவிற்கும் கமலாவிற்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லை. என்றாலும் பாவம் பார்வதி துரதிஸ்ட வசமாக இறந்து விட்டாள். அதன் பிறகு அங்கிருந்து குடிபெயர்ந்து போனவர்கள்தான் நான்கு வருடங்களுக்குப் பிறகு நம்முடைய சொந்த இடத்திற்கு திரும்பி வந்துள்ளனர்.

தாய் மடிந்த சோகம் கமலாவை வாட்டிக் கொண்டிருந்தாலும் நாட்செல்ல செல்ல அவள் மனதில் இருந்த கவலை உணர்வும் மெல்ல மெல்ல மறைந்து தற்போது ஆலயத்தில் சந்தோஷமாக ஆலயக் காட்சியைப் பார்த்து கொண்டு திரிக்கின்றாள். "ஏய் அங்கே பாரண்டி கமலா என்ன வடிவான சாமான் எல்லாம் கெடக்குடி" என்றாள் கமலாவினுடைய நண்பி ஒருத்தி. இன்னொருத்தி "உனக்கு எல்லாத்துக்கும் சேட்டத்தான் வாய வச்சுத்து பேசாம வா" என்றாள். இவ்வாறு தோழியர்கள் பலவாறாக பேசிக்கொண்டுவர அன்றுதான் மலர்ந்த மல்லிகை போன்ற வதனத்துடன் கோயிற் காட்சிகளை ரசித்துக் கொண்டிருக்கிறாள் கமலா.

வைகாசி மாதத்தில் நடக்கின்ற திருவிழா என்பதால் அதனை வைகாசிச் சடங்கு என்று அழைத்து வருகின்றனர். சில்லிக் கொடியாறு கிராமத்தின் நடுவில் அமைந்த சிறியதொரு ஆலயந்தான் சில்லிக் கொடியாறு கண்ணகியம்மன் ஆலயம். நான்கு தினங்கள் சடங்கு நடந்து விட்டன. இறுதி நாளாகிய ஐந்தாம் இரவுச் சடங்கிற்கே கமலா வந்திருந்தாள்.

அன்றைய தினம் தான் கண்ணகி அம்மன் ஆலயத்தில் குளிர்த்தில் நடைபெறும் தினமாகும். இறுதி நாள் என்ற காரணத்தினால் மக்கள் தொகை அதிகமாகவே காணப்பட்டது. மனிதர்கள் எவ்வாறுதான் வாழ்ந்தாலும் பண்டிகைகள், விழாக்கள்

என்று வரும் போது தமது மரபு கலாசாரங்களைப் பேணத் தவறுவதில்லை. அந்த வகையில் பெண்கள் அழகாக புடவை அணிந்து வர, ஆண்கள் வேட்டி அணிந்து கொண்டு வந்திருந்தனர். இளம் குமரிப்பெண்கள் வண்ணவண்ண பாவாடை தாவணிகளை அணிந்து கொண்டு சென்றனர். அவர்களில் காந்தம் இருக்கிறதோ என்னவோ அவர்களுக்குப் பின்னால் இளங் காளையர்கள் சிரிப்பும் கதையுமாக அவர்கள் சென்ற இடமெல்லாம் சென்று கொண்டிருந்தனர்.

ஒரு புறம் பார்த்தால் காவடிகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக வந்து கொண்டிருந்தன. அலகிடும் பெண்களில் சிலர் ஆடிச் சென்றனர்.கண்ணகி அம்மனுக்கு நேர்த்தியாக ஆடுகளும், மாடுகளும், கோழிகளும் மற்றும் பலகாரப்பெட்டிகளும் வந்து கொண்டிருந்தன. இதனைக் கமலா கண்டவுடன் தன்னுடைய தாயாரும் இருந்திருந்தால் தானும் பலகாரப்பெட்டி கொண்டுவந்து கொடுத்திருக்கலாமே என்று மனங்கலங்கினாள். இருப்பினும் கமலா இப்போது சிறுமி இல்லையே. அவள் பதினாறு வயது நிரம்பிய குமரியாகிவிட்ட காரணத்தினால் தன்னுடைய்ய மனதைத் தேற்றிக் கொண்டாள்.

தன்னுடை தந்தையின் அருகில் சென்று "அப்பா எனக்கு தூக்கம் வருகின்றது." என்றாள் கமலா. "என்னுடை அருகில படுத்துக் கொள் மகளே" என்றார் சின்னையா. கமலாவிற்கு அப்போதுதான் உறங்கியது போன்று இருந்தது. கண்விழித்துப் பார்த்தாள். இரவு கூடியிருந்த சனம் ஒன்றையும் காணவில்லை. கிழக்கு வானில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். வைகாசிச் சடங்கு முடிந்து விட்டது. கமலாவிற்கு தான் இரவு பூராகவும் கண்விழித்திருக்கலாம் என்ற கவலை உள்ளத்தின் ஓரத்தில் ஒரு முள்ளாகத் தைத்தது.

● நா. பாஸ்கரன்

## பார் மனிதா பார்

வெடி வெடிக்க மக்கள் அலற
ஊரோ அவஸ்த்தைப் படுகின்றது.
வந்தார்கள் அந்த நயவஞ்சர்கள்
வந்ததும் வந்தார்கள்
மக்களின்
உயிரைக் காவு கொள்ள.

மங்கைப்பருவம் பூண்டு
மனதில் மகிழ்ச்சியோடு திரிந்தவள்
இன்று அலங்கோலமாக்கப்படுகின்றாள்.
போகின்றான் கணவன்
புதையுண்டு போகிறாள் மனைவி.
துள்ளித் திரியும் வயதில்
தூக்கி எறியப்படுகின்றான் சிறுவன்.

தன் சமுதாயத்தைக் காப்பாற்ற
மார்பில் வெடிகளைத் தாங்குகின்றான்.
இவை முடியுமோ..... அல்லது
தொடருமோ........

● ந. ஜனார்த்தினி

## வசந்தத்தைத் தேடி...

போர் முழக்கம்
ஓய்ந்து போனது.
குண்டு மழைகள்
நின்று போயின.

ஈராக்கிய பூமியாய்
இடிபாடுகள் தாங்கியவாறு
எமை ஈன்ற கொக்கட்டி தாய் மண்
இன்று ஏதோ கொஞ்சம்
நிசப்தமாய் கிடக்கிறது.

நித்தமும் சத்தமாய்
நிலமெங்கும் இரத்தமாய்
சிவந்திருந்த எம் தேசம்
சின்னதாய் நிறமாறி
அவாவுடன் காத்திருக்கிறது.

பூக்களும் புற்களும்
அகவும் அழகுமாய்
ஆனந்தமே ஆயுளாய்

சந்தித்திருந்த காலங்கள்
மீண்டும் எம் கரம் நீட்டி
ஏற்குமா? தெரியவில்லை.

கொஞ்சம் சிரித்து
கொஞ்சம் மலர்ந்து
வாழ்வு செழித்து
வாஞ்சை நிறைவாகி
வாழ இனிமேல்
வழி பிறக்குமா?

● ந. ஜனார்த்தினி

## கலை மறுமலர்ச்சி

புதுமை பிறந்தது வாழ்வில்.
புதுயுகம் பிறந்தது செயலில்.
இயற்கை சிரித்தது. – அதில்
இன்னல்கள் மடிந்தன.

எங்கும் குதூகலம் தோன்றின.
எல்லாம் மகிமையாய் மாறின.
வாரிக் கொடுத்தது பூமி – அன்று
வா என்றது வாடி வீட்டு வாசல்.

அள்ளிக் கொடுத்தான் இறைவன்.
அருவிச் சென்றது நாட்கள்.
தேடி வந்தது பெருமை - இதனால்
தேனாக இனித்தது வாழ்க்கை.

வயல்கள் பூத்துக் குலுங்கின.
வயிற்றுப் பசி தீர்ந்தது வாழ்வில்.
கலகலப்பாய்க் கேட்டது மழலைகள் ஓசை:
கலைகள் பெருகிய நாட்கள் வரை.

மதித்து வாழ்ந்தனர் மனிதர்.
மருவிச் சென்றது அடிமைத்தனங்கள்.
நடன மோடு இசை வளர்ந்தது - அங்கே
நன்றாய் சேர்ந்தது கல்வியோடு கடமை.

விவேகம் மாறியது விடியலில்
விவசாயிகள் மகிழ்ந்தனர் வயலில்.
தலை நிமிர்ந்து நடந்தான் தலைவன்.
தானாய் கலை படைத்தான் கவிஞன்.
சமயோசிதமோடு சமமான ஒற்றுமையும் பெருகியது.

**● ஜீ. ஜெயகுகநந்தினி**

# உதிர்ந்த ரோஜா

"சாந்தி! நேரம் பத்து மணியாகித்து. நீ இன்னும் வெளிக்கிடல்லையா? நான் போனப்ப என்ன சொன்னன். பத்து மணிக்கெல்லாம் வந்திடுவன் ரெடியா இரு என்று சொன்னது உன் தலையில் ஏறல்லையா?" என்று கேட்ட வண்ணம் வீட்டினுள்ளே நுழைந்த பிரதீசினுடைய குரலை கேட்டு "கொஞ்சம் பேசாம வாங்களன் நான் என்ன சும்மாவா இருந்தேன்" என்று சாந்தி கூறினாள்.

"மற்ற வேலைகளைப் பிறகு செய்யலாந்தானே. ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்குமோ? இல்ல நாம போகும் வரை தாலி கட்டாமலா இருப்பாங்க. பத்தரை மணிக்கெல்லாம் நல்ல நேரம் முடிஞ்சிடுமாம். தாலி கட்டுனாப் பிறகு போய் நாமங்க என்ன செய்ய" என்று முன்னர் இருந்த இறுக்கத்தை கைவிட்டு கெஞ்சும் குரலில் கூறினான் பிரதீஸ்.

"சரிங்க நான் வெளிக்கிட்டுத்தன் போகலாமா?" என்று கேட்ட வண்ணம் மோகனச்சிலையென வந்து நின்றாள் அந்த அன்பு மனைவி.

அவளைக்கண்டதும் பிரமை பிடித்து சுயநிலை மறந்து நின்றுவிட்டான் பிரதீஸ். தன்னுடைய மனைவி சேலை கட்டுவது அது முதல்தடவை இல்லாவிட்டாலும் அன்று அவன் கண்களுக்கு அவள் தேவலோக கன்னி போன்றே காட்சியளித்தாள். சாந்தி அன்று மஞ்சள் நிறசேலைகட்டி மல்லிகைப்பூ அணிந்து நெற்றியின் நடுவே முழுப்பூரணை நிலா போன்று இல்லாவிட்டாலும் அளவுக்கேற்ற வகையில் வட்டமாகப் பொட்டுமிட்டு தன்னுடைய அங்கலா வண்யங்கள் அனைத்தும் வெளிக்கொணர பிரதீசின் முன்னாள் நின்றாள்.

"காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்ற பழங்கூற்றுக் கிணங்க இந்த உலகிலே தன்னுடைய மனைவியிலும் அழகான மங்கையொருத்தி இருக்க முடியாது. என்று வியந்து பிரதீஸ் அவள் அழகை பருகிக் கொண்டு நின்றான். செந்தாமரை போன்ற அழகிய வதனமும் பார்ப்பாரைக் கொள்ளை கொள்ளும் அழகிய அகண்ட கூர் விழிகளும் குங்குமம் அப்பியது போன்ற சிவந்த கன்னங்களும் சாந்தியின் அழகை மேலும் மெருகூட்டிக்கொண்டிருந்தன. அது மட்டுமல்லாமல் கழுத்துக்குக் கீழே திரண்டிருந்த மார்பகங்களும் கொடி போன்ற இடையும் இதரபாகங்களும் பார்க்கும் எந்த ஆடவனைத்தான் நிலைகுலையச் செய்யாதிருக்கும். ஆகவே அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த பிரதீஸ் "பெண்ணைப் படைத்து கண்ணைப் படைத்த இறைவன் கொடியவனே" என்று கவியரசு கண்ணதாசன் கூறிய கருத்து எத்தனை உண்மையானது என நினைத்து சிலையென நின்று விட்டான்.

அவன் சுயநிலை மறந்து நிற்பதைக் கண்ட சாந்தி "என்னங்க!" என்று அவனை மெதுவாக அழைத்தாள். அந்த அழைப்புக்கு அவனிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்காமை யினால் மீண்டுமொருதடவை "என்னங்க! நான் கதைக்கிறது உங்கட காதில விழல்லையா?" என்று கொஞ்சம் உரத்த குரலில் அழைத்த போதுதான் தன் சுயநிலை அடைந்தான் அவன்.

தன் சுயநிலை கிடைக்கப்பெற்ற பிரதீஸ் "என்ன சாந்தி?" என்று குரலில் அன்பு, தேன் போன்றொழுகக் கேட்டான். "ஒண்டுமில்லை. இண்டைக்குத்தானா என்னைப் பாக்கிறீங்க!" என்று சாந்தி வெட்கத்தின் காரணமாக தலையைக் குனிந்து கொண்டாள்.

"இல்லை சாந்தி: நீ இண்டைக்கு என்று மில்லாத மாதிரி ரொம்ப அழகாக இருக்கா" என்று கூறிய படி அவளை அணைக்கச் சென்றவனை தனது மலர்க்கரங்களால் தடுத்த சாந்தி "இப்ப மட்டும் உங்களுக்கு நேரமாகல்லியா? கொஞ்சநேரம் என்னதான் பாடு பட்டீங்க!" என்று தன் கணவனின் கைகளை விலக்கிய வண்ணம்

கேட்டவளுடைய வலது கன்னத்தில் திடீரென இரு இதழ்கள் குவிந்து அகன்றன. அப்போதுதான் அறியாமலே தன் கணவன் அவனுடைய சாதுரியத்தைக் காட்டி விட்டதை புரிந்து கொண்டாள் அந்த மோகனச் சிலை.

கன்னத்தில் முத்தமிட்டதுதான் தாமதம். "சரி சாந்தி வா போகலாம்" என்று மனைவியை அழைத்துக் கொண்டு தன்னுடைய மோட்டார் வண்டியில் மனைவியை ஏற்றிக் கொண்டு திருமண வீட்டிற்குப் புறப்படலானான்.

பட்டிப்பளைப் பிரதேசத்தில் பல்வேறுபட்ட கிராமங்கள் பல இருந்த போதிலும் "முனைக்காட்டுக்கிராமம்" அவற்றிலெல்லாம் மிகச் சிறப்பு வாய்ந்தது. என்று கூறினால் அது மிகையாகாது. "பச்சை வயல்களும் பசுந்தாற் புல்வெளிகளும். சுற்றிவரச் சோலைக ளும், சுகந்தரும் தென்றல் காற்றும் இறையருளால் அகம் மகிழ இன்னிசைக்கும் நாற் கோயில்கள்: கலைகளிலே செழிக்கும் கலாசாரம் நிறைந்த மக்கள். மகிழ்வுடனே ஒன்று கூடி மனித நேயம் தனை வளர்க்கும் வளம் பெருகும் முனைக்காடு மண்ணின் வாசனையைப் புகழ்ந்து கொண்டே போகுமளவிற்கு புகழ் பெற்று விளங்குகின்றது அக்கிராமம்.

அந்த அழகிய கிராமத்திலே வாழ்கின்ற பல மக்களினாலே நல்லவன் என்று புகழ் பெற்ற மனிதர்களுள் பிரதீசும் ஒருவன். சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க துடிப்புள்ள சுறுசுறுப்பான இளைஞன் தான் இந்த பிரதீஸ். அதே கிராமத்தில் பெண்களுக் கென்று கூறப்படுகின்ற அச்சம்,மடம், நாணம் பயிர்ப்பு என்ற நாற் குணங்களும் நிரம்பப் பெற்ற சாந்தியும் பிறந்து வாழ்ந்தாள். பிரதீஸ் - சாந்தி தம்பதிகள் இல்லற வாழ்க்கையில் இணைந்து கொண்டு ஆறுமாதங்களே போயிருக்கின்றன. இருந்த போதிலும் இவர்கள் இருவரும் பாலியபருவம் முதல் ஒருவரை ஒருவர் அறிந்து அன்பு செலுத்தியவர்களேயாவார். சாந்தியின் தாய்வழி மாமனுடைய மகன் தான் பிரதீஸ். இவர்கள் இருவருக்கும் சிறுவயதிலிருந்தே பெற்றோர் திருமணத்தை நிச்சயித்து விட்டனர். அதனால் அவர்கள் ஒருவர்

மீது ஒருவர் அன்பு செலுத்தி வளர்ந்து திருமண வயதை அடைந்தவுடன் இல்லற பந்தத்தில் இணைந்து விட்டனர்.

இன்று அவர்கள் சாந்தியின் பாடசாலை நண்பியின் திருமணத்திற்கு சென்று கொண்டிருக்கின்றனர். திருமண மண்டபத்தின் வாயிலினை அடைந்தவுடன் இந்த தம்பதியினர் இன் முகத்துடன் வரவேற்கப்பட்டனர். அங்கு திருமணத்திற்கு வந்தவர்கள் அதிகமாக காணப்பட்டதனால் சாந்தி பிரதீசின் உடலுடன் தனது உடலை உரசிக் கொண்டு சென்று மணவரிசையில் முன் வரிசையில் உட்காந்து கொண்டு தனதருமை நண்பியைப் பார்த்து ஓர் மகிழ்ச்சிப் புன்னகையொன்றை அரும்ப விடுவதற்கும் ஐயர் மந்திரம் சொல்வதற்கும் நேரம் சரியாக இருந்தது.

அந்தத் திருமணத்தை நடாத்தி வைப்பதற்கு ஓர் வயது முதிர்ந்த பிராமணக்குருக்கள் ஒருவரே நியமிக்கப்பட்டிருந்தார். அவருடைய வெள்ளிக்கம்பிகள் போன்று மின்னிய நரைத்த குடும்பியும் சுருக்கம் விழுந்த தோலும் அவர் குறைந்தது எண்பது வயது மதிக்கத்தக்கவர் என்று கூறுவதற்கு சான்று பகன்றன.

“கொட்டும் மேளம், கொட்டும் மேளம்” என்று கூறிய ஐயர் ‘மாங்கல்யம் தந்துநானேனாமம ஜீவன கேதுனா கண்டே பத்னாமி சுபஹே தீபம் ஜீவ சரதட்சதம் “என்று கூற மாப்பிளை தன் நண்பிக்கு தாலிகட்டிய வேளையில்,

சாந்தி! சாந்தி! விடிந்து எட்டுமணியாகிற்று இன்னும் நீ எழும்பல்லையா? என்று தனது தாய் அழைக்கும் சத்தத்தை கேட்டு கண்களை விழித்த சாந்தியின் அருகில் தன் அன்புக்கணவனும் இல்லை; அங்கு திருமண மண்டபமும் இல்லை. தன்னுடைய படுக்கை அறையில் தான் இருப்பதை அவள் அப்போதுதான் அறிந்தாள். கண்களை விழித்துக் கொண்ட சாந்தியின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது. அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியதற்குப் நித்திரையில் இருந்தவளை அவளது தாய் எழுப்பியது காரணமல்ல. தன் வாழ்க்கையில் மறக்கமுடியாத

நாட்களை நினைவுபடுத்திய அந்த கனவு பாதியில் மறைந்து விட்டதே என்பதுதான் காரணம்.

விதி செய்த சதியோ? இல்லை சாந்தியின் துரதிஸ்டமோ தெரியவில்லை. திருமணமாகி நான்கு மாதங்களிலேயே தனதருமைக் கணவனை இழந்து கைம்பெண் ஆகிவிட்டாள். அந்தக் கன்னிகை. அன்றிலிருந்து தினம் தினம் தனது கணவனை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்த சாந்திக்கு இரண்டு மாதங்களில் பின்னர் இன்று தன் கனவனை கனவிலே கண்டது மனதில் ஒரு நிம்மதியை ஏற்படுத்தினாலும் அந்தக் கனவும் முழுமையடையாமல் இடையிலே நின்றவுடன் தனக்கு வாழ்க்கையும் நிலையில்லை. இந்தக் கனவுமா நிலையில்லை. என்று மனங்கலங்கியதன் காரணமாகவே அவள் அழுதாள். வெகுநேரம் அழுது கொண்டிருந்த சாந்தி தான் அழுவதால் பலன் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை என்று அழுகையை நிறுத்தி படுக்கையறையிலிருந்து சாரத்தின் மூலம் முற்றத்தை நோக்கினாள்.

முற்றத்தை சாந்தியினுடைய தாய் கூட்டி துப்பரவு செய்து அழகிய கோலமிட்டு வைத்திருந்தாள். அந்த அழகை ரசிப்பதற்காக முற்றத்தில் செழித்து வளர்ந்து நின்ற ரோஜாச் செடிகளும் வண்ண வண்ண நிறங்களில் பூத்துக் குலுங்கி படுக்கறையிலிருந்து இறங்கி பார்த்த சாந்தியைப் பார்த்து புன்னகை புரிந்தன. ஆனால் சாந்தியோ அந்த அழகையெல்லாம் ரசிக்க திராணி அற்றவளாக அந்த ரோஜா செடிகளின் அடிகளில் கண்களை ஒற்றினாள். அங்கு செடிகளின் அடியிலிருந்து பிரிந்ததனால் வாடிக்கொண்டிருந்த ரோஜாவைப் பார்த்த சாந்தி தன்னுடைய வாழ்வும் இந்த உதிர்ந்த ரோஜா போன்றதுதான் என்று எண்ணமிட்டவாறு ஒரு சோகப் பெரு மூச்சொன்றை பிறப்பித்தாள்.

● நா. பாஸ்க்கரன்

## படுவான்கரை

இதயத்தில் எழுதிய இதமான சொல்
படுவான் என்ற பதம்.
உதிரத்தால் ஒன்றுபட்ட மக்கள்.
உழுது வாழ் உயர் நிலங்கள்......

வாவி மகள் வளைந்திசைக்க
வற்றாத ஊற்றாய் வளமானது.
போர்வலி நீங்கி புரியாத புதிராய்
பேர்வழி காட்ட பேராலயம் பேணி வளர்ப்பது.

தேசத்தின் சொத்தாய் மலைக்கோயிலுடன்
மண்முனைக்கப்பால் பாசத்தில் பழையவன்
நேசத்தில் நிகரற்று நிலை நின்றதால்
பூசத்தில் இன்று புதிர் காண்கின்றோம்

பட்டணத்தில் இல்லாத பட்டி
கெட்டியாய் நெய்மணங் கமழ முளையிட்ட வட்டை முறை
நெட்டு நாள் வாழ நேர் நின்று உழைக்க
கட்டிக்காக்கும் களி வளம்......

வீரத் திடலில்
மானத்தென்றல் மகிழ்வூட்ட
மங்கைப்பருவத்தில் கொழுந்து விட்டு
செழிப்பூட்டும் செல்லக் கனி மரங்கள்.

இத்தனைக்கும் நடுவில்
அகர முதலாய் அழகுறக் கற்று
அகிலத்தில் நிகர் நிற்கும் செந்தமிழ் புலமையுடன்
வீரத்தில் நடை கொண்டு
வெற்றியாளர் மிஞ்சிய நிலம்.

● முனையூர் ஜிவி

## மரணம்

மாயமான பிறப்பு மகத்தான வாழ்வு
மானிடர் பட்டம் மடிய வைப்பது யார் திட்டம்?
சரீரத்தினுள் சங்கமித்தது யார்? இன்னும் பதிலில்லை....
நிஜத்தில் சவம் என்றும் பிணம் என்றும் சான்றுரைப்பர்

ஊனத்தில் உயிரில்லை, உயிருக்கு இட்ட பெயரில்லை.
வானத்தில் இருந்தவன் எடுத்ததால் வந்து கூடுவர் நம்மவர்.
பெட்டியாய் பணமிருந்தும் கட்டியாய் உறவிருந்தும்
பாடை என்ற பச்சை தட்டியில் வைத்து பட்டினத்தார் பாடலுடன்

இவ்விரண்டும் பேர் சுமக்க போலியழுகை ஒரு புறம்.
கேலி உறவு பின் வரும்.
வெட்டிய குழியில் கட்டையை இட்டு நாள் எட்டு எண்ணி
மூழ்கி முடிந்தது......

நட்டம் யாருக்கு......
ஞானத்தில் நடிப்பவர்களே!
நீர்க்குமிழிதான் வாழ்வு.
பார்க்குழிதான் சொந்தம்.

● முனையூர் ஜிவி

## ஏழையின் மனச்சுமை

ஏழையாகப் பிறந்தோம் அன்று
வறுமையிலும் சிறுமையாக
வாழ்கின்றோம் இன்று

பணத்தையும் சாதியையும்
மதிக்கிறார்கள் இன்று.
ஏழையாக பிறந்த எம்மை
மிதிக்கின்றார்கள் இங்கு

இறைவனிடம் கேட்கின்றோம்
ஏழையாக பிறந்தது ஏனென்று.
ஏழையாக பிறந்தாலும் கோழையாக
இருக்கவில்லை நாங்கள் இன்று.

ஆட்டங்கள் போட்ட காலம்
அழிந்து விட்டது இப்போது
ஏழைக்கும் நேர்மையுண்டு தெரிந்திட வேண்டும்
மனிதர்க்கெல்லாம்.

ஏழை என்றால் எளிமையாகப்
பேசும் காலம் போய் விட வேண்டும்.
சிந்தித்தால் சிறகிருக்கும் ஏழைகளுக்கும்
பறப்பதற்கு.

சாதனைகள் பல படைத்திடுவோம்
ஏழைகள் நாங்கள்
ஏழைக்கும் மனசிருக்கும் மக்களை
வாழவைக்க
நினைக்கும் போது இனிப்பதுதான்
ஏழையின் வாழ்க்கை.

● அ. ஜித்தா

## எம்பிரதேச மக்கள் .....

மானிட வாழ்வின்
மகத்துவத்தை நுகர
ஏங்கிக் கிடக்கிறார்கள்
எம் பிரதேச மக்கள்

யுத்தமும் இடப்பெயர்வும்
நித்தமும் இடம் பெற்ற வாழ்வோடு
வருத்துகின்ற வறுமைக்கு
விடிவு வேண்டி
காத்து நிற்கிறார்கள்
எம் பிரதேச மக்கள்

ஒரு வேளை அன்னமும்
மறுவேளை கூழும்
அடுத்தவேளை பட்டினியுமாய்
ஆகிப் போன
வாழ்வைத் தொலைக்க
நெஞ்சில் உறுதி கொண்டு
நேர்மைத் திறனுடன்
நிமிர்ந்து நிற்கிறார்கள்
எம் பிரதேச மக்கள

● து. துசாந்தினி

# கிராமத்துப் பெண்

அன்று வெள்ளிக்கிழமை தங்கமுத்துக்கிழவி கோயிலுக்குச் செல்ல என மிகவும் வேகமாக அதிகாலையில் எழும்பி தனது வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டைப்பூட்டி சாவியை இடுப்பிலே சொருவிக்கொண்டுவேகமாக பாதையிலே கோலை ஊன்றி ஊன்றி நடந்து செல்கின்றாள். அவளுக்கோ வயது எண்பது. தங்கமுத்து முன்பு அதாவது எழுபத்தைந்து வருட காலம் தனது பிறந்த இடமான கன்னங்குடாவிலே தனது வாழ்க்கையைக் கழித்து வந்தாள். ஆனால் தனது சூழ்நிலை காரணமாக பிறந்த ஊரைவிட்டு நகர்ப்புறம் செல்ல வேண்டிய கட்டாயத் தேவை ஆயிற்று கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி பக்தி பாடல்களை பாடுவதை தங்கமுத்துக்கிழவி ஓர் அன்றாட கருமமாக செய்து வந்தாள். கிராமத்தில் இவளது அன்றாட கருமங்கள் அனைத்தையும் அவளே செய்வாள். ஆனால் தற்போது அவளது முதுமைநிலை காரணமாக வேறுநபரின் உதவியை நாடவேண்டிய தேவை ஏற்பட்டது. வெள்ளிக்கிழமை அன்று அவள் தனது கோலை ஊன்றிக் கொண்டு நகர்ப்புற பாதை வழியே செல்லும் வேளையிலே போக்குவரத்தில் பல வாகனங்கள் இரைச்சலுடன் சென்றுகொண்டிருந்தன. இதனால் இவள் நடந்து பக்தி இறை சிந்தனைகள் சிதறின. மனம் வருந்திய தங்கமுத்து தெரு ஓரத்தில் மரநிழலின் கீழ் இளைப்பாறினாள். அவ்விடத்தில் இருந்துகொண்ட தங்கமுத்துவின் உடல் மட்டும் இருந்தது ஆனால் அவளது சிந்தனைகள் அவளிடம் இருக்கவில்லை.

சிந்தனைகள் அனைத்தும் எழுபத்தைந்து வருட காலம் வாழ்ந்து கழித்த கிராமத்தை நோக்கியதாகவே இருந்தது. தங்கமுத்துக் கிழவி சின்னஞ்சிறு வயதிலே பெரும் துடிப்பும் கோபமும் உள்ள ஓர் விவேகத்தன்மையானவளாக இருந்தாள். சில வருட காலம் கழிந்தது. தங்கமுத்து கிராமப்புறத்தில் ஓர் விளையாட்டு விளையாடக்கூடிய சிறுமியாக வளர்ச்சியடைந்தாள். அப்போது அவள் விளையாட்டுப்பாடல்களை விரும்பிப் பாடுவாள். அதிலும் அவளுக்கு மிகவும் பிடித்த விளையாட்டுப் பாடல் "கிட்டிப்புல்லும்....." விளையாட்டுப் பாடலாகும். பின்னர் சிறிது காலம் சென்றதும் அவள் பருவ வயதை அடைந்தாள். அக்காலத்தில் அவளது மன உணர்ச்சிகள் பல. அக் காலத்தில் இவள் வயல் வெளிக்குச் சென்று இயற்கை காட்சிகளை இரசிப்பதில் மிகவும் ஆர்வம் மிக்கவளாக திகழ்ந்தாள். அதிகாலையிலே சூரியன் உதித்து வர வண்ணமயில் ஆட காதலன் வருவதைக்கண்ட காதலியாகிய தாமரை மலர்கள் தமது முகங்களை காதலனுக்கு காட்ட பூங்குயில் கூவ குயில்கள் கீதம் பாட குளிர்ச்சியான இன்பக் காற்று இதமாக வீச வயலை நோக்கி விவசாயிகள் புறப்பட பாடசாலை நோக்கி பாலர்கள் ஓட இவை அனைத்தையும் அவள் விருப்புடன் பார்த்து அவள் அடையும் மகிழ்வை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது "ஆகா இத்தனை அழகையும் இறைவன் கிராமப்புறத்தில் படைத்திருக்கிறான் வாழ்ந்தால் இங்கே வாழ வேண்டும்" என்று இவள் வாய்விட்டுக் கூறினாள். அக்காலத்தில் திருமண வயதை அடைந்ததும் காதல் பாடல்களை பாடி மகிழ்வாள். இவள் விருப்புடன் திருமணம் நடந்தேறியது.

பின்னர் வாழ்க்கையில் இறங்கிய தங்கமுத்து கணவனை அன்புடன் ஆதரித்து நல்ல இல் வாழ்க்கையினை நடாத்தி வந்தாள். இக்காலத்திலும் தமது கலாசாரத்திற்கு பொருந்தும் வகையிலே ஆடை அணிகலன்களை அணிந்து வருவாள் இவள் கோயிலுக்கு

சென்று கோயிலில் நடைபெறும் கூத்து, கரகம், கோலாட்டம் போன்ற சடங்குகளில் விருப்புடன் பருவ வயதை அடைந்த காலங்களில் செய்து வந்தாள். ஆனால் திருமணத்தின் பின் அவற்றை செய்வதை நிறுத்திக் கொண்டாலும் அவற்றை வளர்ப்பதில் அக்கறையுடன் செயற்பட்டு வந்தாள். அவள் எப்பொதும் கதைக்கும் போதும் "எலே என்னோட ஆசையெல்லாம் இந்த மக்கள்ற வழக்கில இருக்கிற கூத்து, கரகம், கும்மி எல்லாத்தையும் இடைவிடாமல் வளர்க்க வேணும் என்றுதான்" இவ்வாறு இவள் தனது சடங்குகளில் பக்தி பூர்ந்து செய்து வந்தாள்.

தங்கமுத்து என்றாலே அவளது ஊரில் அவளுக்கு ஒரு தனிப்பட்ட மரியாதை இருந்தது. அதுமட்டுமன்றி கோயில் சமூகம் மற்றும் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கேற்று நடாத்துவதில் சிறந்தவளாகவும் பேச்சால் எவரையும் தன்வசம் திருப்பக்கூடியவளாகவும் இருந்தாள். இவ்வாறு இவளது வாழ்க்கை யில் பிள்ளைகள் மற்றும் தனது கணவனோடு வாழ்ந்து வரும் வேளையில் தனது கணவன் திடீரென எற்பட்ட நோயினால் இறந்தான். பின்னர் தனது பிள்ளைகளை படிப்பித்து ஓர் நல்ல நிலைக்கு கொண்டு வந்தாள். பின்னர் தனது பிள்ளைகள் இருவருக்கும் வேலை நகர்ப்புறம் கிடைத்தமையால் தானும் நகருக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் "தான் வரும் போது தான் அடைந்த துக்கம் ரோஜா செடியில் முள்ளிருந்தது போலாயிற்று" என்று தனது சிந்தனையை வாய் விட்டுச் சொன்னாள்.

இதனைக் கேட்டிருந்த நகர்ப்புற பையன் "ஆச்சி நானும் என்ற வகுப்பு பிள்ளைகளும் உங்கட கிராமத்து ஊருக்கு வாரோம் எங்களை கூட்டித்துப்போவீங்களா?" என்று கேட்டான். தங்கமுத்து கிழவியும் ஆம் ராசா நீங்க எல்லோரும் வாங்கோ இங்கு மங்கிப் போயிருக்கிற கூத்து, கரகம், கும்மி, எல்லாத்தையும் அங்க போய்

கற்று இங்கவும் கொண்டு வரலாம் நாளைக்கு போவம்" என்று கூறிவிட்டு கோயிலுக்கு சென்று விட்டு வீடு திரும்பினாள். தங்கமுத்து கிழவி.

நாளைக்கு ஐந்து வருடங்கள் விட்டுப்பிரிந்து வந்த உறவுகளை காணப்போகின்றேன் என்று தாமரையைக் காணவந்த சூரியன் போல மட்டில்லா மகிழ்ச்சியுடன் உறங்கினாள். ஆச்சியின் கிராமத்து ஊரை காணும் நோக்குடன் காலையிலே ஓடிவந்த பையனும் சக நண்பர்களும் கண்டதும் ஓ...... என்று அழுதனர். பின்னர் தான் தெரியும் தங்கமுத்து இறந்து விட்டான் என்று.

● ப.பிறியாந்தி

## வறுமை

மிச்சம் மீதி எதுவுமில்லை ஐயோ! நாம்
மச்சம் மாமிசம் உண்பதற்கு
மண்ணை நம்பி வாழ்ந்தோம் - மழையில்லை
வளமில்லை வாட்டுதடா வரட்சிப்புயல் எமை

உடலில் வலிமையில்லையே - உயிர்ச்சத்து
உண்ண வழியுமில்லையே - உண்ண
உணவில்லையே உதவக் கரமில்லையே ஐயோ
எட்டாக் கனியோ எம் வாழ்வு ஐயோ!

மூன்று வேளை சாப்பிட முடியவில்லை - ஐயோ
முதியவரின் நோய் தீர்க்க வழியுமில்லை
விடியாத இரவுகளாய் எம்வாழ்வு
இலையுதிர் காலமாய் இன்று போகுதையா!

வறுமையில் சிக்கி விட்டோம் வட்டிக்கு
வாங்கி வாழ்க்கை நடத்துகின்றோம்
சுடு வெயிலில் துடி துடிக்கும் மண்புழுவாய்
துன்பத்தில் துவழ்கின்றோம் - அது தானா? வறுமை

காட்டாற்றில் ஓடும் வெள்ளம் அதன்
கரையோரம் நிலைசாயும் மரம் போல
நிலையற்ற இவ் வாழ்வில் நீர்க்குமிழியாய்
எம் வாழ்வு நிம்மதியில்லை அது நித்தமுமில்லை

வறுமை தீர வழியில்லையோ - எம்
வாழ்வு மாற வரமில்லையோ
வாடிய ரோஜாவா? எம் வாழ்வு
வறுமையின் வடிவம் இதுதானா? ஐயோ! ஐயோ!

● அ. தனுராஜ்

# உன் நினைவில் நான்

என் நினைவலைகளில்
நீ தூங்குவது சரியா? ....... கண்மணி
நாம் இருவரும் ஒன்றாக
கை கோர்த்துச் சென்ற காலம்
இனி எப்போது திரும்பி வரும்?......
உன் வரவை எதிர்பார்த்து
ஏங்குகின்றது வீதியோரம்.

காலங்கள் கழிந்தாலும் உன்
நினைவலைகள் என்னை விட்டுக் கழிவதில்லை.
எதைப் பார்த்தாலும் எதை எடுத்தாலும்
அனைத்திலும் உன்முகம் கண்மணி.

மெழுகுவர்த்தி கடைசித் துளிவரை இருளைமறைப்பது
போன்று.... நீ என்னுடன் இருந்த காலம்
ஒரு வசந்த காலம்

யார் வரவையும் எதிர்பார்க்காத என்
கண்கள் உன் வரவை எதிர்பார்த்து நிற்கின்றது
எப்போது நீ வருவாய்?
அதுவரை உன் நினைவோடு நான்.

● க. கௌசிகா

### உழவர்

பச்சைப் பசேலெனும்
பசுமையான வேளாண்மையை
இயற்கையான முறையில்
இனிதாக உருவாக்கும் உழவனே!

மந்தைக்கு புல்லூட்டி
மானிடர்க்கு சோறூட்டி
பண்பான மனிதனாய்
பாரினிலே வாழ்ந்து வந்த உழவனே!

வியர்வை சிந்தி!
விழி விழித்து
உதிரம் சிந்தி!
உண்மைக்காய் பாடுபட்டு
தன்னம்பிக்கையுடன்
தரணியில் வாழ்ந்து வந்த உழவனே!

ஏர் தனைக் கைபிடித்து
எருதுதனை அதில் பூட்டி
உலகத்துக்கே சோறு போடும் உழவனே!
உனைநான் வாழ்த்துகிறேன்
வாழ்க ! வாழ்க!

● து. துரேஸ்கான்

# கிராமத்துப் புழுதி மணல்

தென்றலோடு கலந்து வரும் இசையில் கவலைகளையும், கஸ்டங்களையும் மறந்தவளாய் சங்கீதா அருவியில் நீராடுகின்றாள். இனிமையான காலைப்பொழுது இளம் தென்றல் வீசிவர, திங்கள் தன் பொன் சுடரைப் பரப்பி நிற்க அருகில் உள்ள அம்மன் கோயிலில் பக்தர் கூட்டம் நிரம்பி வழிய விழிக்கின்றாள். இரவு வேலை முடிந்து வந்த களைப்பில் தன்னை மறந்து தூங்கிய குமாரசாமி திடுக்கிட்டு எழும்பி நேரத்தைப் பார்க்கிறான். நேரம் எட்டு மணியைக் காட்டுகிறது. அவசரமாய் எழுந்து அடுப்புச் சாம்பலில் பல்லை சுத்திகரித்தவாறே முகத்தை அலம்பிக்கொண்டு வர அவனது மகள் ஆனந்தி தேநீர் கோப்பையை கொடுக்க குடித்து விட்டு விடை பெற்று காலில் செருப்பின்றி மண்வெட்டியுடன் வயல் நோக்கிச் செல்கின்றான். சங்கீதா சற்று உட்கார "அம்மா ஸ்கூலுக்குப் போக வேண்டும் நேரமாச்சி சாப்பாடு தா" என்று கடைசி இரண்டு மகனும் கேட்க திடீரென்று எழும்பி அவர்களை ஆயத்தம் செய்து விட்டு இரவு சமைத்த பழஞ்சோற்றை இருவருக்கும் கொடுத்து அனுப்பிவைத்தாள்.

மூத்த மகள் ஆனந்திக்கு வயது இருபது மேல் படிப்புப் படிக்க பணம் இல்லை. என்ற படியால் படிப்பை நிறுத்தி விட்டு வேலை செய்கிறாள். மகனுக்கு இருபத்தி ஒன்பது வயது இரண்டு முறை வெளிநாடு சென்றிருக்கிறான். திரும்பி வந்து அப்பாவிற்கு ஒத்தாசையாக ஒரு மணி நேரம் மற்ற நேரமெல்லாம் ஊர் சுத்தி

திரிவான். அதுவும் இந்த நேரம் கோயில் சடங்கு ஆன படியால் அவனை கொஞ்சம் கூட காணமுடியாது. "எல்லாம் நிறையப் படைத்த இறைவன் ஏதோ ஒன்றை குறைவாக படைப்பான். எல்லாவற்றையும் குறைவாகப் படைத்த இறைவன் ஏதோ ஒன்றை நிறைவாக படைப்பான்". என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அதே போல்தான் இந்தக் குடும்பத்திலும் வறுமை, கவலை, வேலையின்மை போன்றவை இருந்தாலும் சந்தோசம் மட்டும் நிறைந்திருந்தது.

இந்த குடும்பத்தில் மட்டுமல்ல கிராமத்திலும் தான் காலையில் வேலை என்ன அரசாங்கத்து வேலையா? இல்லை வயல் வேலை. கோயில் சடங்குக் காலம் என்றால் வயல் அறுவடைக் காலம் ஆனபடியால் ஆண்கள் வயலை கால் நடைகளில் இருந்து காப்பாற்ற வயலுக்குச் செல்வார்கள் இருந்தாலும், ஒரு வருடத்தில் ஒரு முறை அதுவும் ஏழு நாள் வரும் அம்மன் கோயில் சடங்கைப்பாரர்ப்பதைத் தவறவிடலாமா? இல்லை. ஒரே குதூகலம் அந்த ஊர் மக்கள் மட்டுமல்ல நிறையக் கிராமங்களில் இருந்து சடங்கு பார்க்க வருவார்கள். ஆறு நாள் இரவும் பகலும் நித்திரையில்லை பகலில் தெய்வம் ஆடி ஊர்வலம் செல்லும் இரவில் கூத்து, கரகம், கும்மி, நாடகம் போன்ற கலை நிகழ்வுகள் கடைசி நாள் காவடி தீ மிதிப்பு போன்றவை இடம்பெறும் அக்காலத்திலேயே கலை நிகழ்வுகள் சாகாவரம் பெற்றவைதானே. எப்படிக் கஸ்டப்பட்டு உழைத்தாலும் அவை அனைத்தும் கடன் தீர்ப்பதிலேயே செலவாகி விடும்.

மீண்டும் குடிசை மண் அணைப்பில் இருந்த சங்கீதாவிற்கு ஒரே யோசனை என்னைப் போல தானா? என் பிள்ளைகளும் கவலையிலும், கண்ணீரிலும், வறுமையிலும் வாழ்வார்கள் என்று

அவளை நினைக்க மனம் சிதறினாலும் நான்கு ஐந்து என்று பெண்ணை பெற்றெடுத்து வைத்திருக்கும் கிராமத்துத் தாயை நினைத்தால் மனம் பதறுகிறது என்ன செய்வாள் அவள் அவளும் ஒரு பெண் தானே

பகலவனை இருள் சிறைப்பிடித்து விட்டான் குமாரசாமி களைப்பில் நடக்கிறோமா? அல்லது தவழ்கிறோமா? என்று தெரியாமல் குடித்து விட்டு வருகிறான். அவரைக் கண்ட இரு பிள்ளைகளும் பயத்தில் குடிசைக்குள் மறைகின்றனர். மகன் அப்போது வந்த மகன் தந்தையைப் பார்த்துத் திட்டுகிறான் “உழைக்கிறதெல்லாம் குடிச்சித்து ஆடினா வறுமை போகுமா? காலையில் எழுந்து இரவு படுக்கச் செல்லும் வரை தெருவிலும் வீட்டிலும் கடன்காரனுக்குப் பதில் சொல்வது யார்? உனக்கு பிள்ளைகள் இருக்குன்னு கவலை இல்லையா? ஆனந்திக்கு கல்யாணம் செய்கிறல்லையா? என்று பேசுகிறான். தந்தையின் கஸ்டத்தை புரிந்து கொண்ட ஆனந்தி “அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை நான் இப்படியேதான் இருக்கிற” என்று சொல்லுகிறாள். இருவரின் கதையையும் கேட்டு நின்ற குமாரசாமி அழுகிறாரா? சிரிக்கிறாரா? என்று தெரியவில்லை. இது ஒரு வாழ்க்கைக் கோலம்.

இரண்டு வயதில் வெளி ஊருக்குச் சென்ற ஆனந்தியின் பெரியம்மாவின் மகள் நீற்றா பதினெட்டு வருடம் கழித்து சொந்த ஊருக்குக் குட்டைப்பாவாடை கட்டைச் ரீசேட் தலையை விரித்து விட்டு கோயில் சடங்கிற்கு வருகிறாள். தங்களுடைய வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் அனைவரும் நீற்றாவையே திரம்பிப் பார்க்கின்றனர். ஆனால் அவள் ஆனந்தியின் வீட்டை அடைந்ததும் எல்லோரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். பின் அன்றிரவு எல்லோரும் இரவுச் சடங்கிற்கு கோயிலுக்குச் செல்ல ஆயத்தமாகின்றனர். நீற்றா

தாவணி பாவாடை அணிந்து தலையை சடைபின்னி மல்லிகைப் பூ வைத்து தேவதை போல் காலில் செருப்பின்றி கோயிலுக்குச் செல்கிறாள். அவளின் பூப் போன்ற பாதத்தில் கரடுமுரடாகக் கிடந்த கிறவல் கல் குத்துகிறது வலியைத் தாங்கி நடந்து செல்கிறாள். அங்கு நடக்கும் பூசைகளைப் பார்த்து அவள் பிரமிக்கிறாள். கிராமத்து மக்கள் அவளைப் பார்த்துப் பிரமிக்கின்றனர்.

இப்படியாக காலம் காலமாய் கிராமத்து மக்களின் வாழ்க்கை முறை பண்பாட்டு மரபுகள் கலாசாரம் சடங்கு நிகழ்வுகள் என்பன புழுதியின் கீழ் புழுதியாய் படிந்து அடிக்கும் தென்றல் காற்றுக்கு மேலெழுந்த வண்ணம் இருக்கின்றன. அதிகமாக கண்ணீரில் மூழ்குவதும் இவர்கள் தான் கடைசியில் காவியமாக வாழ்வதும் இவர்கள் தான். அவர்களின் ஒவ்வொரு சந்ததியினரும் இப்படியே வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். காலச்சக்கரம் கிராமத்துப் புழுதி மணலையும் விட்டு வைக்கவில்லை.

● **கோ. விறிகாங்கா**

## வாழ்வின் மகத்துவம்

வாழ்க்கையிலே கண்ணியமாய் வாழ
வாழும் வகைதனை அறிந்திட வேண்டும்.
வாழ்வினிலே பெருமையினை பெற்றிடவே
வானளாவிய இலட்சியம் வேண்டும்.

சோதியாய் ஒளி பொருந்தி வாழ்வதற்கு
சோதனைகள் பலவற்றை கடந்திட வேண்டும்.
சோர்வினை அகற்றிப் பழகிடவே
சோம்பல் தனை தவிர்த்திட வேண்டும்.

கவலையற்று வாழ்வினிலே வாழ்வதற்கு
கடமைதனை சரிவர செய்திட வேண்டும்.
காணாத கல்விதனைப் பெற்றிடவே
கலங்கரை விளக்கமாய் திகழ்ந்திட வேண்டும்.

நிம்மதியாய் வாழ்வினிலே வாழ்வதற்கு
நித்தமும் உண்மையாய் வாழ்ந்திட வேண்டும்.
நிகரில்லாத தனிச் சிறப்பைப் பெற்றிடவே
நிசி நாள் பாராது கற்றிட வேண்டும்.

துன்பங்கள் அகற்றிப் போக்கிடவே
தூல மூர்த்தியை வணங்கிட வேண்டும்.
துயரங்ளை தூரத் துரத்திடவே
துணிவோடு வாழ்வைப் நோக்கிட வேண்டும்.

உலகுக்கு உதாரணமாய் வாழ்ந்திடவே
உணர்ச்சிகளை கட்டுப்படுத்திட வேண்டும்.
நுண்ணறிவை விருத்தி செய்திடவே
நூதனமாய் செயலாற்றிட வேண்டும்.

பாரினிலே பலகலை பயின்றிடவே
பக்குவமாய் சேவையாற்றிட வேண்டும்.
பார்வைகளை முன்னோக்கி நோக்கிடவே
பாவங்களை தூரத் தள்ளிட வேண்டும்.

● சி. தனோஜிதன்-

## என்னை விட்டுப் பிரிந்த உயிர் நண்பி

என் அறை முழுவதும்
பரவுகிறது
உன் ஞாபகம்.
உன்னைக் காணாத
என் மனம்
வேதனையில் மூழ்கிறதே !

உன்னைப்பார்க்காமல்
நான் படும்
அவஸ்தையை
என்னால் சொல்ல முடியவில்லையே!
எங்கிருந்தோ வந்தோம்.
எப்படியோ பழகினோம்.
சில நாளிலே பிரிந்தோம்.

நாம் பழகிய அந்த நாட்களை
நினைக்கும் போது என் மனம்....
ஆனால் ....
எல்லாம் கனவாகிப் போனதே!
நண்பியே!
காத்திருக்கிறேன்.
அந்த இனிய நாளையே!

● பா. சரிதா

## சந்தி நாய்

வேட்டைப் பற்களை
கடைவாயில் கிட்டிக் கொண்டு
நாக்கு நீழ
ஈரற் குலை பிடுங்கும்
கொலை காரனைப் போல
யாருக்காக இந்த நாய்
காத்து நிற்கிறதோ!

பழக்க தோசமோ!
மேலதிக நேரமும்
பணியாற்ற வேண்டிய கட்டாய கடமையோ!
கால் வலிக்காதோ! கண்சோராதோ!

இனியும்
துரத்திக் கடிக்குமோ!
அதன் விசம் ஏறி இறந்தால்
விசாரனை எப்படி நடக்குமோ!
சாட்சி சொல்ல யாரேனும் வருவார்களோ!
ஃவரவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமோ!

பள்ளி செல்லும் என் மகனை
விரட்டுமோ!
மனைவி வேலை விட்டு வரும் போது
கண்களை உருட்டிப் பார்க்குமோ!
என்னைக் கடித்து உண்பது பற்றி
திட்டம் வகுக்குமோ!
யாரிடமும் முறையிட்டால்
ஏதேனும் நடக்குமோ!
அடி மனதில் எப்போது அதற்கு
அன்பு ஊறுமோ
அன்றே அதற்கு எல்லோர் வீட்டிலும் விருந்து.

● மாரி மகன்

## வாழ்க்கை ஒரு நாடக மேடை

பூஞ்சோலை எனும் கிராமம் மிகவும் அழகு வாய்ந்தது. அந்தப் பூக்கள் எவ்வாறு மலர்ந்து மணம் வீசி இன்பமடைகின்றதோ அதுபோல அவ்வூரில் வாழும் மக்களும் சந்தோசத்துடனும் செல்வத்துடனும் காணப்பட்டனர். ஆனால் அவ்வூரில் வாழ்ந்த தங்கம்மாவோ முகத்தில் சந்தோசத்துடனும் மனதில் ஏக்கமும் நிறைந்தவளாக காணப்பட்டாள். தங்கமாவின் கணவன் நான்கு வருடங்களுக்கு முன் நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டார். தங்கம்மாவிற்கு உதவியாக மூன்று பிள்ளைகளையும் விட்டு விட்டு இறந்து விட்டார்.

தங்கமாவுக்கு கஸ்டத்துக்கு மேல் கஸ்டம் வந்து கொண்டே இருந்தது. தங்கம்மாவிற்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையுந்தான். அந்த மூன்று பிள்ளைகளையும் படிக்க வைத்து எல்லோராலும் மதிக்கத்தக்க பிள்ளைகளாக உருவாக்க வேண்டும் என்பதே அவளது கனவாக இருந்தது.

தங்கம்மா தனது மூன்று பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அவ்வூரில் உள்ள எஜமானியம்மா வீட்டிற்குச் சென்று பல வேலைகளைச் செய்தாலும் அந்த எஜமானியம்மா குறைந்த சம்பளமே கொடுப்பாள். என்ன செய்வது இது "வறுமையின் கொடுமை" என நினைத்து விட்டு தங்கம்மா அந்தப் பணத்தைப் பெற்று வீட்டிற்குத் தேவையான பொருட்களும் வாங்கி பிள்ளைகளுக்குத் தேவையான பாடசாலை பொருட்களும் வாங்குவாள்.

தங்கம்மாவின் பிள்ளைகளோ தாய் படும் கஸ்டத்திற்கு எல்லாம் நாம் படித்து ஒரு நல்ல பிரஜைகளாக வந்து நாம் படும்

துன்பத்திற்கு எல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். என நினைத்து இரவும் பகலுமாகப் படித்துக் கொண்டே இருப்பார்கள்.

ஒரு நாள் மூன்று பிள்ளைகளுக்கும் இரண்டாந் தவணைப் பரீட்சை தொடங்கியது. அதற்குப் பரீட்சைக் கட்டணம் மூன்று பிள்ளைகளுக்கும் மொத்தமாக நூற்று முப்பத்தைந்து ரூபா பணம் தேவைப்பட்டது. அதற்குத் தங்கம்மா மனம் தளராமல் தங்களுக்கு உணவுக்காக இருந்த நெல்லை விற்று பணம் பெற்று மூன்று பிள்ளைகளின் பரீட்சைக் கட்டணத்தையும் கட்டினாள்.

அப்படித் தங்கம்மா பல கஸ்டப்பட்டு தனது பிள்ளைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என நினைத்திருக்கும் போது அவ்வூரில் வாழும் சில பொறாமை கொண்ட மக்கள் தங்கம்மாவின் மனதை நோக வைப்பதற்காக உனது பிள்ளைகள் ஒன்றுக்கும் உதவாத பிள்ளைகளாகவே உருவாகும் என்று மனம் வருந்தும் அளவிற்குப் பேசுவார்கள் அதற்குத் தங்கம்மா எனது பிள்ளைகள் ஒழுங்காக படித்து நல்ல தொழில் செய்வார்கள் அது மட்டுமல்லாமல் நீங்கள் அவர்களிடம் பல உதவிகளைக் கோருவீர்கள் என்று கூறிவிட்டுச் சென்று விட்டாள்.

தங்கம்மாவின் மகளான உமா பதினொராம் வகுப்புப் படிப்பவள். அதனால் அவள் பல கருத்தரங்குகளுக்குச் செல்ல வேண்டும் என்பதற்காகத் தனது காதில் இருந்த தோடுகளைக் கழற்றி விற்றுத் தனது மகளுக்காக ஒரு புதிய துவிச்சக்கர வண்டி ஒன்றை வாங்கிக் கொடுத்தாள். தங்கம்மாவுக்கு வயது அதிகரிக்க அதிகரிக்க நோய்களும் பல ஏற்பட்டன. அவ்வளவு கஸ்டத்திற்கு மத்தியிலும் அவள் மனம் தளரவே இல்லை.

தங்கம்மாவின் மூத்த மகனான சுரேஸ் உயர்தரப்பரீட்சை எழுதிப் பெறுபேறு வந்தது. பரீட்சையில் சித்தியடைந்தான். பல்கலைக்கழகம் செல்வதற்குப் பணம் அதிகமாகத் தேவைப்பட்டது. அதனால் சுரேஸ் நான் படிக்கவில்லை. ஏதும் தொழில் செய்யப்போகின்றேன் எனக் கூறினான். அதற்குத் தங்கம்மா நான்

கஸ்டப்பட்டு எப்படியாவது உனக்குப் பணம் தருவேன் என சுரேசுக்கு அறிவுரை கூறினாள்.

தங்கம்மாவின் பெற்றோர் அவளுக்குச் சீதனமாகக் கொடுத்த நெற்காணியை விற்று சுரேசின் கல்விக்கான பணத்தைக் கொடுத்தான். சுரேஸ் தனது மேற்படிப்பைத் தொடங்கப் பல்கலைக்கழகம் சென்றான். தங்கம்மாவின் மற்றைய இரண்டு பிள்ளைகளும் பல பரீட்சையில் சித்தியடைந்து அவர்களும் படிப்பைத் தொடர்ந்தனர். இப்படியாகப் பல வருடங்கள் புரண்டோடின.

தங்கம்மாவின் உடல் நிலை மோசமாகக் காணப்பட்டது. ஆனால் அந்த மூன்று பிள்ளைகளின் திறமையின் பரிசாகப் பலர் அவர்களுக்கு உதவி புரிந்தனர். தங்கம்மாவின் மகன் சுரேஸ் ஒரு வைத்தியராக வந்தான். அப்போது தங்கம்மா அடைந்த சந்தோசம் இவ்வுலகில் வாழ்ந்த எவருமே அடைந்திருக்கமாட்டார்கள். சுரேஸ் தனது தொழிலை ஒழுங்கான முறையில் செய்து பணம் பெற்று ஒரு பெரிய வீடு கட்டினான். அது மட்டுமல்லாமல் தனது கிராமத்தில் ஒரு பெரிய வைத்தியசாலையையும் நிறுவி அவ்வூரில் இருந்த மக்களுக்காகப் பல உதவிகளைச் செய்தான்.

அப்போது தங்கம்மா முன்னர் தனது பிள்ளைகள் படிக்கமாட்டார்கள் எனக் கூறியவர்களுக்கு கூறிய பதில் சரி என உணர்ந்து திருப்தி அடைந்தாள். தொழிலிலும் சுரேஸ் சிறந்தவனாகத் திகழ்ந்தான். பின்னர் தங்கம்மாவின் இரண்டு பிள்ளைகளும் ஆசிரியத் தொழிலும் கணக்காளர் தொழிலும் பெற்று வந்து தங்களது தெய்வமான தாயின் தாள் பணிந்தனர்.

ஒரு நாள் நான்கு பேரும் உணவு உண்ணும் போது தங்கம்மா மயக்கம் போட்டுக் கீழே விழுந்தாள் சுரேஸ் பரிசோதனை செய்து பார்த்த போது தங்கமாவிற்கு இருதய நோய் என அறிந்தான். உடனே தனக்கு மேலாகப் பணி புரியும் வைத்தியரிடம். தனது தாய்க்கு வேண்டிய சிகிச்சை செய்தான்.

ஆனால் அந்தச் சிகிச்சையில் தங்கமாவுக்கு நடந்தது....... தங்கம்மா கஷ்டப்படும் போது பணம் இல்லாமல் கஷ்டத்தோடு

வாழ்ந்தாள். ஆனால் அவளுக்குப் பணமும் மதிப்பும் வந்த போது தங்கம்மாவின் உயிர் இருக்கவில்லை. தனது தாய் கஷ்டப்பட்டு எம்மை வளர்த்துப் படிக்கவைத்து, இப்பொழுது ஒரு நல்ல நிலையில் இருக்கும் போது அம்மா இல்லையே என தங்கம்மாவின் பிள்ளைகள் அழுது புரண்டனர். இப்பொழுது தங்கம்மாவின் மூன்று பிள்ளைகளும் அநாதைகள் ஆயின. மூன்று பேரும் தனது தாய்க்கு எவ்வாறு உதவி செய்வார்களோ? அதே போல தங்களது ஊரில் உள்ளவர்களுக்கு உதவி செய்து "வாழ்க்கை ஒரு நாடக மேடை அதை வாழ்ந்துதான் காட்ட வேண்டும்" என வாழ்ந்தனர்.

● **அ. கிருபாதேவி**

## நட்பு

இனமதங்களுக்கிடையில் ஒற்றுமையை
நிலைநாட்டி - மானிடராய்
பிறந்த எம் உள்ளங்களில்
அன்பு என்னும் விதையைப்
போட்டு நட்பு என்னும்
நீர் ஊற்றி - அதை
சமாதானப்பயிராய் முளைக்க
வைத்து மகிழ்ச்சி அடைந்த
என் உயிர்த்தோழி நீ.

அமைதியில் சிறந்த
அழகிய உயர்ந்த உள்ளம்
கொண்ட என் அருமை நண்பி நீ.
அன்பில் உயர்ந்த
நட்பில் நனைந்த
நட்பின் அர்த்தம் எனக்கு
உணர்த்திய ஓர் உறவு நீ.
-----
நட்புக்காய் உன் உயிரை
அர்ப்பணம் செய்தாய்.

உன் உறவுகளை என்
உறவுகளாய் அறிமுகம் செய்தாய்.

உன் பணிகள் மென்மேலும் வளர
உன் உள்ளம் மகிழ்ச்சியில் குதித்திட
நான் உன்னை என்றும்
குதுகலமாய் வைத்திடுவேன்.

● வி. சசிகலா

## என் தாயின் அவலம் என் வாழ்வுடன்

என்னைப் பெற்ற தாயே!
நீர் படும் துன்பம் எவ்வளவு
நான் அறிவேன்
அப்பஞ் சுட்டு
என்னைப் படிக்க வைக்கின்றாயே
என் மனம் பதறுகின்றதே தாயே.

உன் வாழ்க்கை இதுதானா
என்று நான் புலம்புகின்றேன்.
என் தாயே..... என் தாயே....
ஓட்டை குடிசை தனில் எம்
வாழ்க்கை கழிகிறது.
குடிசை வீட்டினுள்
குஞ்சி விளக்கெரிகிறது

பட்டினி எம்மை பிடித்து கொன்றுவிடுமா?
ஏன் ஐயம்?
வாழ்ந்துதான் பார்ப்போமே.
உனக்கு நான்
எனக்கு நீயென்று

வாழ்வைத்தந்த கடவுள்
எப்படியென்று பாரம்மா?
உலை கொதிக்கின்றது
ஊறு கொள்ளி எரிகின்றது.
இக்கொடுமை
ஏழை எம்மை சூழ்ந்ததே
இதற்கெல்லாம் விடிவுகாலம்
என்றொரு நாள் வருமம்மா?

● ச. துவாரகா

## **நட்பு** (சமூக சீர்திருத்த நாடகம்)

**கதாப்பாத்திரங்கள் :-** **சதீஸ்** *(மாணவன்)*
**மோகன்** *(மாணவன்)*
**விபுலன்** *(மாணவன்)*
**ராஜன்** *(ஆசிரியர்)*
**சுதர்சன்** *(அயலவர்)*

**காட்சி 1**

(காலைப் பொழுதினிலே கதிரவன் தனது ஒளி வீச, எங்கும் அமைதியுடன் சூழல் காணப்படுகின்றது. சதீஸ் பாடசாலைக்குச் செல்வதற்காக சைக்கிளை எடுத்து ஓட்டும் வேளையில்.........)

**சதீஸ் :-** என்ன மோகன் நடந்து வாறாய்? விபுலனோட சைக்கில்ல வருவையே எங்க விபுலனையும் காணல்ல?

**மோகன் :-** விபுலன் இனி பள்ளிக்கு வரமாட்டானாம் அதுதான் நான் நடந்து வாறன்.

**சதீஸ் :-** ஏன் வரமாட்டானாம்? என்ன பிரச்சினையாம்? (அதிர்ச்சியுடன்)

**மோகன் :-** விபுலண்ட அப்பாவுக்குப் பக்கவாதமாம் அதனால் அவண்ட அப்பா வேலைக்கும் போக மாட்டாராம். அதுதான் விபுலன் வேலைக்குப் போறதாம் என்று சொன்னான். (சோகத்துடன்)

**சதீஸ் :-** விபுலன் என்கிட்ட சொல்லல்லையே. (சோகத்துடன்)

**மோகன் :-** அவனிண்ட வீட்டுச்சூழல் என்ன செய்யிறது.

**சதீஸ் :-** என்னதான் இருந்தாலும் நானும் அவன்ட நண்பன் தானே என்கிட்டையும் சொன்னால் என்னால் முடிந்த உதவியைச் செய்வேன் என்று அவன் நினைக்கவில்லையே.

**மோகன்:-** வா சதீஸ் பள்ளிக்கு நேரம் போகுது பள்ளிக்குப் போய் ராஜன் ஆசிரியரிடம் சொல்லுவோம். அவர் தான் எம் மீது அதிக பாசம் வைத்திருப்பவர்.

**காட்சி 2**

(இருவரும் சைக்கிளில் பாடசாலைக்குச் சென்று ராஜன் ஆசிரியரை நோக்கிச் செல்லும் வேளை)

**சதீஸ் :-** மோகன், ஆசிரியர் என்ன சொல்கிறாரோ தெரியவில்லை.

**மோகன் :-** ஆசிரியர் விபுலனுக்கு உதவி செய்வார் எனக்கு நம்பிக்கை இருக்கு.

**சதீஸ் :-** சேர் குட் மோனிங்

**மோகன் :-** சேர் குட் மோனிங்

**ராஜன் :-** குட் மோனிங்

**சதீஸ் :-** என்ன மோகன்? சேரிட்ட சொல்லவேணும் என்று சொன்னையே சொல்லன்.

**ராஜன் :-** என்ன விசயம் இருவரும் தயங்குகின்றீர்கள்?

**சதீஸ் :-** சேர் விபுலன் இனி பள்ளிக்கு வரமாட்டானாம். அவன்ட அப்பாவுக்ககு பாரிசவாதமாம் விபுலன் இனி வேலைக்கு போப்பறானாம்.

**ராஜன் :-** சரி நான் அதிபரோடு கதைச்சிட்டு அவனுக்கு மாதம் மாதம் சிறு தொகை பணம் பெற்றுக் கொடுப்பதற்கு செய்து கொடுக்கிறன்.

**சதீஸ் :-** சேர் நிச்சயம் தானே. உங்கட கையிலான் சேர் விபுலனின் கல்வி இருக்கு.

**ராஜன் :-** நிச்சயமாக விபுலன் நல்லா படிக்கிற பொடியன் அவனுக்கு உதவி செய்யாம வேற யாருக்கு உதவி செய்யப்போறன்.

**சதீஸ் :-** நன்றி சேர் நாங்க விபுலனிட்ட சொல்லுறம்.

**மோகன் :-** சேர் இப்பவே நாங்க விபுலன்ட வீட்டிற்குப் போறம்.

**ராஜன் :-** சரி போயிட்டுவாங்க.

**காட்சி 3**

(சதீசும், மோகனும் விபுலனின் வீட்டிற்குச் சென்று விபுலனை அழைக்கும் வேளை சுதர்சன் விபுலனின் வீட்டை நோக்கி வருகின்றான்)

**சதீஸ் :-** சுதர்சன் அண்ணா விபுலன் எங்கே?

**சுதர்சன் :-** அவன் வேலைக்குப் போக என்று சொன்னவன் எந்த இடம் என்று சொல்லல்ல.

**மோகன் :-** விபுலன் வந்தால் ராஜன் ஆசிரியர் அவரது வீட்டிற்கு வரச்சொன்னதாக சொல்லுங்கள்.

**சுதர்சன் :-** என்ன விசயம்?

**சதீஸ் :-** ( நடந்தவற்றையெல்லாம் கூறினான்)

**சுதர்சன் :-** நல்லது உங்கட நண்பன் கஷ்டப்படும் வேளை உதவி செய்வதற்காக ஆசிரியரோடு கதைத்து இவ்வளவு உதவிகளை செய்து கொடுத்திருக்கின்றீர்களே? இதுதான் உண்மையான நட்பு.

**சதீஸ் :-** நண்பன் என்று வாய்ப்பேச்சுக்குக் கூறினால் அது உண்மையான நட்பு இல்லை. உடுக்கை இழந்தவன் கைபோல் இருப்பதுவே உண்மையான நட்பு.

**சுதர்சன் :-** விபுலன் வரட்டும் நான் மறக்காமல் சொல்லுறன்.

**சதீஸ் :-** நல்லது நாங்கள் இருவரும் போயிற்றுவாறம்.

**சுதர்சன்:-** நல்லது இது போல நீங்க இறுதி வரையும் உண்மையான நண்பர்களாக இருக்க வேண்டும்.

**மோகன் :-** நாங்கள் இறுதி வரைக்கும் இவ்வாறு நண்பர்களாக இருப்போம்.

**எடுத்துரைஞ்ஞன் :-** பார்த்தீர்களா மக்களே! சமுதாயத்திலே நாம் வாழும் போது ஒருவருக்கொருவர் நல்ல நண்பர்களாக இருப்பதுடன் துன்பம் வரும் வேளையில் தோள் கொடுத்து உதவுவதே உண்மையான நட்பாக கருத முடியும். சதீஸ், மோகன் ஆகிய இருவரும் ஆசிரியரிடம் சென்று கூறா விட்டால் விபுலனது நிலைமை என்னவாக இருக்கும். சிந்தியுங்கள். செயற்படுங்கள். உங்கள் கையிலே சமுதாய முன்னேற்றம் உள்ளது.

● **கோ. சங்கீதா**

படைப்பாளர்கள்

1. அரசூர் பகீரதன் :- அரசடித்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இப்பிரதேசத்தின் வளர்ந்து வரும் இளங்கவிஞராவார்.
2. அ.கிருபாதேவி :- முனைக்காட்டைச் சேர்ந்தவர்.தரம் 12 இல் கல்வி கற்கிறார்.
3. க.கௌசிகா :- அம்பிளாந்துறையைச் சேர்ந்த இவர், இவ்வூர் வித்தியாலயத்தில் தரம் 12 இல் கல்வி கற்கிறார்.
4. கோ.சங்கீதா :- அம்பிளாந்துறையைச் சேர்ந்தவர்.தரம் 11 இல் கல்வி கற்கிறார். நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடுடையவர்.
5. வி. சசிகலா :- முனைக்காட்டைச் சேர்ந்த இவர், தரம் 13 இல் கல்வி கற்கிறார்.
6. பா. சரிதா :- பட்டிப்பளைப்பிரதேசத்தைச் சேர்ந்த இவர் கவிதை எழுதுவதில் மிகுந்த ஈடுபாடுடையவர்.
7. சோலையூரான் :- இவர் கொக்கட்டிச் சோலையைப்பிறப்பிடமாகக் கொண்டவர். இயற்பெயர் ஆ. தனுஸ்கரன். கவிதை மொழியை யதார்த்த வாழ்வுடன் பிசைந்து உணர்வுபூர்வமாக எழுதி வருகிறார்.
8. அ. தனுராஜ் :- அம்பிளாந்துறையைச் சேர்ந்த இவர், தரம் 13 இல் கல்வி கற்கிறார்.
9. சி. தனோஜிதன் :- அம்பிளாந்துறையில் வசிக்கும் இவர் தரம் 11 இல் கல்வி கற்கிறார்.
10. து.துசாந்தினி :- பட்டிப்பளைக் கிராமத்தைச் சேர்ந்த இவர், அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தரம் 13 இல் கல்வி கற்கிறார்.
11. து.துரேஸ்கரன் :- பட்டிப்பளைக் கிராமத்தில் வசிக்கிறார்.தரம் 10 இல் கல்வி கற்கிறார்.

12. ச.துவாரகா :- கற்சேனைக்கிராமத்தைச் சேர்ந்த இவர் தற்போது அம்பிளாந்துறை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கிறார்.
13. சு.நளினி :- பட்டிப்பளைப்பிரதேசத்தைச் சேர்ந்த இவர் இப்பிரதேசத்தின் வளர்ந்து வரும் இளங்கவிஞர்களுள் முக்கியமானவர்.
14. நா. பாஸ்கரன் :- இவர், முனைக்காட்டுக் கிராமத்தைச் சேர்ந்தவர். தரம் 13 இல் முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்கிறார்.சிறுகதை எழுதுவதில் மிகுந்த ஈடுபாடுடையவர்.
15. பிறியாந்தி :- அரசடித்தீவு இவரது சொந்த இடம். தரம் 12 இல் கல்வி கற்கிறார்.
16. மாரிமகன் :- இவர் அரசடித்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கவிதை, சிறுகதை, ஆய்விலக்கியம் போன்ற துறைகளில் ஈடுபாடு செலுத்தி வருகிறார்.
17. முனையூர் ஜிவி :- முனைக்காட்டைச் சேர்ந்த இவரது இயற்பெயர் ஜீவிதன் என்பதாகும். கவிதை எழுதுவதில் நாட்டம் செலுத்தி வருகிறார்.
18. கோ. விறிகங்கா : அரசடித்தீவைப்பிறப்பிடமாகக் கொண்ட இவர் இவ்வூர் வித்தியாலயத்தில் தரம் 12 இல் கல்வி கற்கிறார்.
19. ந. ஜனார்த்தினி :- இவர் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்தவர். தரம் 11 இல் கல்வி கற்கிறார்.
20. அ.ஜித்தா :- இவர், கற்சேனைக் கிராமத்தைச் சோந்தவர். தரம் 13 இல் கல்வி கற்கிறார். கவிதை எழுதுவதில் ஆர்வமுடையவர்.
21. ஜீ. ஜெயகுகநந்தினி :- கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இவர், இவ்வூர் வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வியைத் தொடர்கிறார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு சந்திப்புக்களின் போது கிடைக்கப்பெற்ற ஆக்கங்கள் இத் தொகுப்பினுடாக வெளி உல்கிற்கு முன் பிரசன்னமாகி நிற்கின்றன. பட்டிப்பளைப் பிரதேச கலை, இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்நடாத்திய கவிதை, சிறுகதைப் போட்டிகளின் போதும் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தினரால் நடாத்தப்பட்ட கவிதை பயிற்சி வகுப்பின் போதும் இப்பிரதேச மாணவர்களிடமிருந்து பிரதேச மண்வாசனை, மக்களின் இன்னல்கள், யுத்தத்தின் தீண்டல்கள், நட்புக்கான ஏக்கங்கள், தேடல்கள் எனப் பல பொருள்களில் வெளிப்பட்ட ஆக்கங்கள் இத் தொகுப்பில் இடம் பெறுகின்றன.

